திருவள்ளுவர் ஆண்டு 2041

அக்டோபர் - 2010

# செந்தமிழ்

## திங்கள் இதழ்

தொகுதி : 54
பகுதி : 12

விலை ரூ. 10/-



மதுரைத் தமிழ்ச் சங்க வெளியீடு

# ஔவையை மறந்த அவலம் !

கவிவேந்தர் கா. வேழவேந்தன்

அன்றொருநாள் விடிகாலை கடற்கரைக்குச் சென்றேன்;
அலைமீட்டும் இசைகேட்டே மெய்சிலிர்க்க நடந்தேன்;
நன்றியுடன் காஞ்சியண்ணன் தென்றமிழ்ச்சான் றோர்க்கே
நட்டுவைத்த சிலைகளினைக் கண்டுகண்டு நெகிழ்ந்தேன் !
இன்றுவரை கடற்கரையின் ஏற்றத்தைக் காணா
எழிற்கோவை மாணவியர் இருவர்வந்து சேர்ந்தார்;
'நின்றிருக்கும் நேர்த்திமிகு சிலைகளுக்கே இடையில்
நிமிராத கூன்கிழவி யாரென்றாள்?' ஒருத்தி.

'எனக்குமட்டும் தெரிவதுண்டா? பீடத்தின் கீழே
இழைத்திருக்கும் அவள்பெயரைப் படி !' என்றாள் தோழி !
மனக்கணக்கைப் போடுவது போல்எழுத்தைத் கூட்டி,
மாணவியோ'ஓ' வ்வொன்றும் 'ள' வென்றும் பிரித்தே
கனித்தமிழ்த்தாய் ஔவையவள் தனிப்பெயரைக் குதறிக்
கண்டபடி உளறிவைத்தாள்; உளம்நொறுங்கிப் போனேன் !
இனிக்கின்ற 'நல்வழி'யை 'மூதுரை'யைத் தந்த
எம்அன்னை பெயர் அறியா இழிநிலைக்கே நொந்தேன் !

சேச்சேச்சே ! தமிழ்மண்ணில் 'ரெயின்ரெயின்கோ' என்றே
தேம்சுமொழி பயில்வதானல் நீதிநெறி எங்கே?
பூச்சரமாய் மணம்பரப்பும் புனல் 'ஆத்தி சூடி'
புகழ்க்'கொன்றை வேந்த' னைநாம் கற்பிக்க மறந்ததோம் !
பேச்செதற்கு? நாம்ஊன்றும் விதைதானே விளைந்து
பின்னரிங்கே அறுவடையாய் நம்கையில் சேரும் !
மூச்சான தாய்மொழியை நாம்மறந்தால் அழிவே;
முன்னேறும் நாடெல்லாம் தரும்பாடம் இதுவே !

# செந்தமிழ்

(தோற்றம் 1903)


தொகுதி : 54 | திங்கள் இதழ்

பகுதி : 12 | திருவள்ளுவர் ஆண்டு 2041

அக்டோபர் 2010




வள்ளல் பாண்டித்துரைத்தேவர்
21.03.1867-02.12.1911

| இதழ்க் கட்டணம் | உள்நாடு | வெளிநாடு |
|---|---|---|
| ஆண்டுக் கட்டணம் | ரூ. 100 | ரூ. 600 |
| புரவலர் கட்டணம் | ரூ. 1000 | ரூ. 2000 |
| தனி இதழ்க் கட்டணம் | ரூ. 10 | |


**முகவை மன்னர் நா. குமரன் சேதுபதி**
தலைவர்,
மதுரைத் தமிழ்ச்சங்கம்.

---

**ஆசிரியர்**
**இரா. அழகுமலை** எம்.ஏ., எம்.ஃபில்.,
செயலாளர்,
மதுரைத் தமிழ்ச்சங்கம்,
மதுரை.

# பொருளடக்கம்

பரிமேலழகருரை விளக்கம் — ரா. இராகவையங்கார் — 4

மடல் 1 — தி. பக்கிரிசாமி — 11

கண் ! — ஆறுவிரல் ஐம்பொறி — 12

தாய்த் தமிழைச் சேய்கள் மறந்ததேன்? — 24

கவிவேந்தர் கா. வேழவேந்தன்

ஞானக்கூத்தன் கவிதைகளில் தொழிலாளர் நிலை — 25

சா. இளையராஜா

தமிழ்ச்சங்க வரலாறு — பேராசிரியர் திரு. ஆ. கார்மேகக்கோன் — 31

# இதழ் மணம்

அன்புடையீர்,

செந்தமிழ் வாசகர்களுக்கு வணக்கம்.

அக்டோபர் மாத செந்தமிழ் இதழ் முன்னைப் பழமைக்கும் பழமையாய், பின்னைப் புதுமைக்கும் புதியதொரு பெற்றியதாய் இதோ உங்கள் கைகளில் தவழ்கிறது.

நூலெல்லாம் வள்ளுவர் செய் நூலாகாது; பாரித்த உரையெல்லாம் பரிமேலழகர் உரையாகாது; என்பது தான் தமிழ்ச் சான்றோர் வாக்கு. அப்பரிமேலழகர் உரைக்கே உரைவிளக்கம் தந்தவர் செந்தமிழ் பத்திரிகையின் தொடக்க காலத்து ஆசிரியரான ரா. இராகவயங்கார் அவர்கள். வாசகர்களின் விருப்பத்திற்கிணங்க அன்னாரின் விளக்கம் மறுபதிப்புச் செய்யப்பட்டுள்ளதை மறுவாசிப்புச் செய்து மகிழ்வீர்.

இதனைத் தொடர்ந்து தி. பக்ரிசாமி அவர்களின் திருவள்ளுவர் வாக்குப்படி வாழ்ந்தவர்கள் எத்தனைபேர்? வாழ்பவர்கள் எத்தனை பேர்? என்ற வினாவுடன் தொடங்கும் பதினோறு செய்தித் தொகுப்பின் கருத்துக்கள் புதிய சிந்தனைகளாக இருப்பதால் தங்களுடைய சிந்தனைக்கும் தரப்பட்டுள்ளது.

நமது அறிஞர் ஆறுவிரல் ஐம்பொறி அவர்கள் சென்று பற்றும் பொறியான 'கண்ணுக்கு' வாக்கிற்கினிய அருணகிரிநாதர் தந்துள்ள உவமை நயத்தினை சுவைத்து மகிழலாம்.

முன்னைத் தமிழக அமைச்சரும், கவிவேந்தருமான கா. வேழவேந்தன் அவர்கள் 'தாய்தமிழை சேய்கள் மறந்தது ஏன்?' – என்னும் மரபுக் கவிதையை மரபை மறந்து வாழத் தொடங்கியிருக்கும் தமிழர்களுக்காகத் தந்திருக்கிறார். ஔவையை மறந்த அவலத்தையும் வெளிப்படுத்தியிருக்கிறார்.

ஞானக்கூத்தன் கவிதைகளில் தொழிலாளர் நிலை என்ற சா. இளைய இராசாவினுடைய ஆய்வுக் கட்டுரையைத் தொடர்ந்து, நான்காம் தமிழ்ச்சங்கப் பொன்விழா மலர் கட்டுரை வாசகர்களின் விருப்பத்திற்காக மீண்டும் மறுபதிப்பு செய்யப்படுகிறது. பண்டித வித்துவான், புலவரேறு பேராசிரியர் திரு. அ. கார்மேகக்கோன் அவர்கள் பொன்விழா மலரில் மலரச்செய்த தமிழ்ச்சங்க வரலாற்றின் முதல்பகுதியோடு அக்டோபர் மாத இதழ் தமிழ்விருந்தாகப் பரிமாறப்பட்டுள்ளது.

பருகி மகிழ்வீர் ! தமிழ்வாழ ஆதரவு தருவீர் !!

**முனைவர் க. சின்னப்பா**

இனி நீங்களும் இதழும்....

*செந்தமிழ் தொகுதி 1, பகுதி 10 இல் இருந்து*
*வாசகர்களின் விருப்பத்திற்கிணங்க மறுபதிப்பு செய்யப்பட்டுள்ளது.*

# பரிமேலழகருரை விளக்கம்

*மகாவித்துவான்*
*ரா. இராகவையங்கார்*

(இது வடமொழியில் 'டீகை' என்பதுபோல் உரைக்குரையாய் வருவது. வடமொழியுள் 'வியாக்கியானம்' 'பாடியம்' எனப் பெயரி பேருரைகள் எல்லாம் பெரும்பான்யையும் டீகைகள் உடையனவாகும். இவ்வுரை தமிழினுஞ் சிறுபான்மை உண்டு. திருவாய் மொழியின் வியாக்கியானங்களுள் உரைக்குரையாய் வந்தன பலவள. இவ்வாறே திருக்குறட் பரிமேலழகருரைக்குரையாக ஆழ்வார் திருநகரித் திருமேனி - இரத்தினகவிராயரால் இயற்றப்பட்டது. 'நுண் பொருண் மாலை' எனப்படுவது. அதனோடு அப்பரிமேலழகருரையினை யான் என சிற்றறிவுக்கியன்றவளவால் விளக்கிய 'உரைத்தேற்றம்' என்பதனையுஞ் சேர்த்து ஈண்டுக் கடவுள் வாழ்த்து மட்டில் வெளியிடப்படுகின்றது - பத்திராசிரியர்)

## முதல் அதிகாரம் - கடவுள் வாழ்த்து

பரிமேலழகர் உரை. கவி.................வுணர்க.

உரைத்தேற்றம் - ஈண்டு அதிகாரமென்றது ஒரு பொருணுதலிரும் பல பாவினது தொகுதியை. இதனை யதோத்தேசபக்கம் என்ப வடநூலார். இவ்வாறு சேனாவரையத்தானும் சங்கர நமச்சிவாயத்தானும் உணர்க. இவ்வதி காரத்துள்ள பத்துக்குறள் வெண்பாட்டும் கடவுள் வாழ்த்து என்னும் ஒரு பொருளே நுதலிவருமாறு கண்டுகொள்க. இஃதெல்லாவதிகாரங்கட்கும் ஒக்கும். 'வெறிகமழ் தாமரை மீமிசை யொதுங்கிய' வறினை வணங்கியறைகுவன் யாப்பே' (யாப்பருங்கலம்) என்பது வழிபடு கடவுள் வாழ்த்து. குண்டலகேசி, நீலகேசித்தெருட்டு

இவற்றிற் கூறப்பட்ட 'மூன்றான் பெருமைக்கணின்றான்' 'நல்லார் வணங்கப்படுவான்' என்னுங் கடவுள் வாழ்த்துக்கள் முறையே அவ்வந்நூற்கேற்பு உடைய புத்தனையும் அருகனையும் வாழ்த்தியவாம். என்னை? அவ்விருபெரு நூல்களும் முறையே புத்த தருமமும் அருகத்தருமமுமே எடுத்துரைக்கப் புக்கனவாதலான் என்க. இனி, நூற்கேற்புடைக்கடவுளேதான் வழிபடு கடவுளாதலும், கவிதான் உண்டெனக் கொள்க. சத்துவம், இராசதம், தாமதம் எனக் குணங்கள் மூன்று. இவற்றான் மூன்றாகிய உறுதிப்பொருள்கள் முறையே அறம், பொருள், இன்பமென்பன. அவற்றான் என்பது அம்முக்குணங்களான் என்றவாறு. மூவர் - அரி, அயன், அரனென்பார். உறுதிப்பொருட்கு முதற் கடவுளரோடுளதாய இயைபு ஒரு முக்குணங்களான் முத்திற்படுதல்

*அகரமுதல வெழுத்தெல்லா மாதி*
*பகவ முதற்றே யுலகு.*

பரி...........உரை.............எழுத்துக்களெல்லாம்........................... கூறப்பட்டது.

நுண்பொருண்மாலை - அவைபோல வென்னாது ஒருமையாய் அதுபோல வென்றது காண்க. வாளாது எடுத்துக்காட்டுவமையென்னாது தலைமை பற்றி வந்த என்றதனாலும், 'முதற்றே யுலகு என உலகின் மேல் வைத்துக் கூறினாரேனும் உலகிற்கு முதல் ஆதிபகவனென்க. ஆதிபகவன் என்பது பகர வொற்று மிகாமையால் வடநூன்முடிபன்றாரென்க. தமிழ் முடிபாயின் 'அறைபறை கண்ணார்க்கு' (திருக்குறள். 1120) உரைத்தாங்குரைப்பர். எடுத்துக்காட்டுவமையாவது உவமவுருபு பெறாது அதுபோல எனப் பெய்துரைப்பக்கிடப்பது. இதனை இசையெச்சம் என்றெழுதினார் சேனாவரையர் எச்சவியலில். (சூ-ம் 44) அது 'காகத் திருகண்ணிற் கொன்றே மணிகலந் தாங்கிருவர்' என்னுங் கோவையாருரையிற் காண்க. காணப்பட்டவுலகு உயிர்மேனின்றாற் காணப்படுதலெவ்வாறெனின் ; முன்னர் 'உலகம் வழங்கி வருதலால்' (திருக்குறள் 11) என்பதற்கு உயிர் உடம்பொடு காணப்பட்டு வருதலாலென்னுமுரையானும் 'உயிரீரும் வாளாது (திருக்குறள் 334) என்பதனானுங் காணப்படும்.

உரைத்தேற்றம் - எழுத்துக்கு முதல்ல அகரம்; அதுபோல, உலகிற்கு முதல் ஆதிபகவனென முதன்மைப்பண்பு பற்றி முன்னது பின்னதற்கு எடுத்துக்காட்டப்பட்டுள்ளதால் தலைமைபற்றி வந்த எடுத்துக்காட்டுவுமையாயிற்று. உவமையும் பொருளும் ஆதற்குரியவாய்த் தனித்தினிமுடிந்த இரண்டு தொடர் மொழிகள் உவம வுருபின்றி இணைந்து நிற்குமாயின் அஃது எடுத்துக்காட்டுவமையாம். இச்செய்யுளை வேறுபடவந்த வுவமை யென்பர் நச்சினார்க்கினியர். அவர் 'வேறுபடவந்த வுவமத்தோற்றம்' என்னும் உவமவியற்சூத்திரத்து 'அகரமுதலவெழுத்தெல்லாம் என்றவழி இரண்டு பொருள் வேறு வேறு கூறியதன்றி அகரமுதலவெழுத்தெல்லாம் அதுபோல என்றானும், ஆதிபகவன் முதற்றுஉலகம் அதுபோல என்றானும் ஒன்றாகத் துணியுமாற்றான் உவமையும் பொருளுங் கூறாமையின், அதுவும் வேறுபட வந்த வுவமம் ஆயிற்று. என வுரைத்தவாற்றான் அறிக. அவர் 'மக்களைக் கயவர் ஒவ்வார் என்னுங் கருத்தினான் மக்கள் போல்வார் கயவர் என்றமையின், மக்களே போல்வர் கயவர் என்பதும் வேறுபடவந்தவுவமாயிற்று என்பர். இவ்வாறு அவா வேறுபடவந்த வுவமைக்கெடுத்தோதிய செய்யுட்களெல்லாம் ஒருநெறிப்பட்டன வன்மையாலும், அதனிலக்கணமும் வரையறையின்றிச் சேறலானும், இறுதியில் அவரே 'இவை யேனை உவமத்திற்கெல்லாம் பொதுவிலக்கணம்' என்றமையானும் இது பொதுவிலக்கணமேயாவதல்லது, பரிமேலழகர் கூறியது போல இச்செய்யுட்குச் சிறப்பிலக்கணமாதலின்றென உணர்க. இனிப் பரிமேலழகர் 'நிலத்தியல்பா னீர்திருந்தற்றாகு மாந்தர்க் கினத்தியல்ப தாகு மறிவு' (திருக்குறள் 452) என்பது முதலாக எடுத்துக்காட்டுவமை எனக்குறித்த செய்யுட்கள் எல்லாம் இதனோடு ஒத்தநெறிப்பட்டனவாதலும், எடுத்துக்காட்டுவமைக்கோதியவாறு உவமவுருபு பெறாது 'அதுபோல' எனப் பெய்துரைப்பக்கிடத்தலும் கண்டுகொள்க. இனி, இலக்கணவிளக்கமுடையார் 'மறுபொருளுவமையெனினும், எடுத்துக்காட்டு உவமையெனினும் ஒக்கும்' என்பர் அவரும், தண்டியலங்காரவுரைகாரரும் மறு பொருளுக்கு எடுத்துக்காட்டிய 'அன்னைபோலெவ்வுயிருந் தாங்கு மநபாயா' நின்னையா ரொப்பார் நிலவேந்த - ரன்னதே, வாரி புடைசூழ்ந்த வையகத்துக் கில்லையாற் சூரியனே போலுஞ் சுடர்' என்னுஞ் செய்யுள்

அன்னதேயென உவமவாசகம் பெற்றுக்கிடத்தலானும், பேராசிரியரும் 'கலந்தாங்கிருவர்' (திருக்கோவையார் - 71) என்னும் பாடத்தினை எடுத்துக்காட்டாகக்கொள்ளாது 'கலந்தாரிருவர்' என்னும் உவமவுருபுபெறாப் பாடத்தினையே எடுத்துக் காட்டாகக் கோடலானும் மறுபொருளுவமையைப் பிரதிவஸ்து பமை எனவும், எடுத்துக்காட்டுவமையை திருஷ்டாந்தலங்காரம் எனவும் வடநூல் கூறப்படும். இயல்பாற்பிறத்தல் - அறிவித்தாலறியுந் தன்மை. உலகு நிலத்தையும், உயிரையும், ஒழுக்கத்தையும் குறிக்கும் பல்பொருட்கிளவியாகலின், ஈண்டு உயிரின் மேற்று எனப்பட்டது. தேற்றம் - தெளிவு பொருண்மை, உலகு முதற்றென்றது உலகின் மேல்வைத்துக் கூறிற்று.

இனி, ஆவியும் ஒற்றுமாகிய எல்லாவெழுத்துக்களும் தம்மைத் தோற்றிக் கலந்தியக்கித் தம்மில்வேறாய அகரமுதலலையுடைய; அது போல, இயங்குதிணையும் நிலைத்திணையுமாய இவ்வுலகம் தன்னைத் தோற்றிக் கலந்தியக்கித் தன்னின் வேறாய ஆதிபகவன் என்னும் முதலையுமைத்து; என உவமையையும் பொருளையும் விரித்துரை கோடலும் பொருந்தும். இங்ஙனம் அகரம் உயிர்க்கண்ணுந் தனிமெய்க்கண்ணுங் கலந்தியக்குமென்பதனை 'மெய்யி னியக்க மகரமொடு சிவணும், என்னுந் தொல்காப்பிய மொழிமரபிற் சூத்திரத்து நச்சினார்க்கினியர் உரையான் உணர்க. ஆசிரியர் தொல்காப்பியனார் 'எழுத்தெனப்படுப' என்றனவன்றி எழுத்தோரன்ன வென்ற சார்ந்துவரன் மரபின் மூன்று மடங்கு, எழுத்தெல்லாம் என்றார் எனினுமையும், கவன் - பகமெனப்பெயரிய அறுகுணமுடையோன்; அவை அறிவு, திரு, ஆட்சி, ஆற்றல், அவாவின்மை, புகழ் என்பன. இவ்வாறு விண்டு புராணத்துட் கூறப்பட்டது. இவ்வேதுப் பெயர் தேவரிற் சிலர்க்குமிட்டு வழங்கலின், அப்பிறரியைபு ஒழித்தற்கு ஆதிப்பெயர் முன்வைத்தார். ஆதி முதல்வன் என்னும் பொருட்டு, ஈண்டைக்கு இசைந்தபொருள் விளங்க எஞ்சிநின்ற தொடர்மொழியாகலின் 'அதுபோல' என்பதனை இசையெச்சம் என்றார் உரையாளர் சேனாவரையர் (தொல்-சொல் எச்சவியல் 44)

*கற்றதனாலாய பயனென்கொல் வாலறிவ*
*னற்றா டொழாஅ ரெனின்.*

பரி-உரை. கல்லா.................... கூறப்பட்டது.

நுண்மாலை. கற்றது 'உடுப்பதூ உமுண்பதூ உமின்றிக் கெடும்' (திருக்குறள் 166) என்பது போலச் செயப்படுபொருளாய்க் கல்வியாயிற்று. 'காலைக்குச் செய்தநன் றென்கொ லவன் கொல்யான்-மாலைக்குச் செய்த பகை' (திருக்குறள் 1225) எனபழி, எவன்கொல் என்பதனாலும் எவன் திரிந்ததறிக. மூன்றாவதும், எனின் என்னெச்சமும் ஆய என்பதனோடு முடிந்தன, என்கடைக் கண்ணினும், என்னுங் கோவையாரும் (299) அது. 'அவற்றுட், பிரிநிலை (தொல்-சொல் 35) என்னுஞ் சூத்திரத்து நச்சினார்க்கினியர் (சோற்றைப் பசித்துண்டான்' எனக் காட்டியதும் அது.

உரை................றம். 'எவன் என்பதோர் பெயருமுண்டு; அஃது இக் காலத்து என் என்றும், என்னையென்றும் நிற்கும் எனச் சேனாவரையரும், 'படுத்த லோசையால் எவன் என்பது பெயருமாம்; அஃது இக்காலத்து என் என்றும் என்னையென்றும் மருவிற்று' என நச்சினார்க்கினியரும் கூறுப. (தொல் : சொல்வினை 22) கொல் அசைநிலையாதல் புறனடையாற்கொள்க. பொருளுணர்த்தாது பெயரொடும் வினையொடும் சார்த்திச் சொல்லப்பட்டு நிற்றலின் அசை நிலையாயிற்று என்ப. ஆகமவறிவு - நூலானெய்திய செயற்கையுணர்வு. ஊழானெய்திய இயற்கையுணர்வு முளதாகலின் ஆகமவறிவெனப்பட்டது. ஆகமம் - நூல் 'ஆகமவளவை' என்பதனாலும் அறிக. 'கற்றீண்டு வாரா நெறி' (திருக்குறள் 356) என்பது பற்றி ஆகமவறிவிற்குப் பயன் பிறவியறுத்தல் என்றார். அளபெடை - யாழ்ப்பழியாமை வந்தது. 'மாத்திரை வகையாற்ற ளைதம கெடாநிலை - யாப்பழியாமையென் றளபெடை வேண்டும்' என்பவாகலான். எல்லா நூல்களையுங் கற்றுவைத்தும் நற்றாள் தொழார் ஒன்றுங் கல்லாரேயாவர் என்பது இதன் கருத்தாம்.

*மலர்மிசை யேகினான் மாணடி சேர்ந்தார்*
*நிலமிசை நீடு வாழ்வார்.*

பரிஉரை. மலரின் கண்ணே............நினைத்தல்.

நுண்.........மாலை. 'ஏற்றுவாருமுளர்' என இவ்வாறு பிறர்க்கருத்து உரைப்பனவெல்லாம் வடநூலார் பஷாந்தரம் என்பர். அவனடி உடம்பாற் சேரப்படாமையிற் சேர்தல் நினைத்தலாயிற்று. இதனை வடநூலார் உசிதமென்பர். 'பொன்போற் பொதிந்து' (திருக்குறள் 155) என்பதும் இவ்வாறு போந்த பொருள்படுமென்க. 'வாராக்காலத்தும்' என்னுஞ் சூத்திரம் 'ஏகினான்' என்பதற் கமைத்தார். 'இறுமாப்பொழிந்தவிணைமுலை' என்னுங் கோவையாரும் (373) அது. மாணடி-வினைத் தொகை.

உரை...........றம். ஈண்டு அன்பென்றது அளவில்காலம் ஒன்றுமுணர்தலின்றி வாளாகிடந்ததம்மையும், தம்மையுடைய தன்னையும் இவ்வுயிர்கள் உணர்ந்துய்யுமாறு, இறைவன் அரும்பெறன்மக்கள் யாக்கையிற் புகுவித்தருளிய தொடர்புபற்றி அவன்மேற்செல்லும் உள்ளக்காதலை. உள்ளங் கமலவடிவிற்று என நூல்கள் கூறலின் மலர் என்றார். ஏகினான் - காலவழுவமைதி. பூமேனடந்தோன் - அருகன்; 'மலர்மிசை நடந்த மலரடி யல்ல தென்-ற லைமிசை யுச்சி தானணி பொறாஅது' எனக் கவுந்தி கூறியதனாலும் உணர்க. மிசைநிலம் என மாற்றுக. நிலமிசை - திலத்துக்கு மேல் ; என்றது எல்லா நிலத்துக்கும் மேலாய வீடு எனினும் அமையும். நீடு அழிவின்மையைக் குறிப்பானுணர்த்திற்று. இனி, மலர்மிசையேகினான்' என்பதற்குத் 'தண்டாமரை சுமக்கும் பாதப்பெருமானை' (திருவாய்மொழி) என்பதற்கியையப் பொருளுரைப்பினும் அமையும். 'எரியாயதாமரையே லியங்கினாரும் (தேவாரம்) என்பது பற்றிப் பிரமனுக்குரைப்பினும் அமையும்.

*வேண்டுதல் வேண்டாமை யிலானடி சேர்ந்தார்க்*
*கியாண்டு மிடும்பையில.*

பரி......உரை. ஒரு பொருளை.......இலவாயின.

நுண் மாலை. யாண்டும் என்பது காலப் பொருட்டாயிற்று. ஒன்றினுள் 'யாண்டுமுகாஅமை' (585) என்பது சதுருபாயப் பொருட். இனி, இடப் பொருட்டுப் பெரும்பான்மையும் வரும். இல என்பது உண்டு என்பதற்கு மறையாய்ப் பொருண்மை சுட்டி இல்லென்னும் பொருட்டாய்ப் 'பிறன்கடை நின்றாருட் பேதையரில்' (142) என்றதுபோல நின்றது. 'கோளில்பொறியிற் குணமில' (9) என்பது உடைய என்பதற்குமறையாய்த் தலைகள் குணத்தையில என வினைக் குறிப்பாய்

நின்றது. 'இன்றில' (தொல்-வினை-23) என்னுஞ் சூத்திரத்துள், இளம்பூரணர், கல்லாடர், சேனாவரையர், நச்சினார்க்கினியர் முதலாயினோர் உரைத்த உரையினுங் காண்க. முன்னர் உள, உளது, உண்டு, இலது, உடைத்து, அன்று, இன்று என வருவனவெல்லாம் இவ்வாறு வரும்; ஆண்டாண்டுக்கொள்க. இடும்பை மூவகைத்து; இவற்றை வடநூலார் தாபத்திரயம் என்பர்.

உரை.....றம். தன்னைப்பற்றிவருவன - பிறர்க்குரியாளை விழைந்து அவன் கடைச் சென்று அச்சமுறுதலும், உறுப்பறையுண்டலும் போல்வன. பிறவுயிர்களைப்பற்றி வருவன - கடபோரானும், பொய்க்கரி கூறுவோரானும் அறை போவாரானும் கேடெய்திவருந்தல் போல்வன. தெய்வத்தைப் பற்றி வருவன மருந்திற் றீராத வன்பிணியுழத்தலும், வானினுருமு தன்கண் வீழ்தலும் போல் வன. இனி, உடல்வாயிலாகவருவது; உடலொடு கூடிய உயிர்வாயிலாக வருவது; இவ்வரியில் களானன்றித் தெய்வங்காரணமாகவருவது எனக் கூறுவாரும் உளர். இவற்றை, ஆதிபௌதிகம், ஆத்தியான்மிகம், ஆதிதைவிகம் என்ப வடநூலார். இறைவனடியினையே இடையிடாது நினைத்தல் செய்வார்க்குப் பிறிதொன்று கருதுதலின்மையின், அக்கருத்துப்பற்றி வரும் வேண்டுதலும் வேண்டாமையும், இலவாயினமையான் 'அடிசேர்ந்தார்க்கும் அவ்விரண்டு மின்மையின்' எனவும், வேண்டியன எய்தாமையானும், வேண்டாதன எய்தலானுமே உயிர்கட்குத் துன்பமுளவாகலின், 'அவை காரணமாகவரும் மூவகைத்துன்பங்கள்' எனவும், கூறினாரென உணர்க. துன்பம் - பிறந்தோருறுவதூஉம், இன்பம்-பிறவாருறுவதூஉம் ஆதலின், இடும்மையினைப் பிறவித்துன்பங்களென்றார். 'பிறந்தோருறுவது பெருகிய துன்பம் - பிறவாருறுவது பெரும் பேரின்பம்' என்பது மணிமேகலை துறவு ஒரு பொருளை விழைதலும் வெறுத்தலும் அதனானெய்தும் இன்பமுந் துன்பமுமாய் பயன்குறித்தன்றே; அங்ஙனம் இறைவற்கு இன்ப மனுந் துன்பமேனும் எய்துவித்தல் எப்பொருளானும் ஆகாமையான. ஒன்ற னைவேண்டுதலும் வேண்டாமையும் அவர்க்கிலவாயின. ஈண்டு வேண்டுதலிலான் என்றது பயன்பற்றாது உயிர்த்தொகைகளை வீட்டின்பத்துய்க்கும் பேருளுடையனென்பதனோடு மாறுபடாமை உய்த்துணர்ந்து கொள்க. 'இறைவன் அன்பிலனாயினும் அருஞ்சுரத்தின்மரம்போல் அடைந்தார்க் களித்தல் அவற்கியல்பு' (சிந்தாமணி - பாயிரம் 3) என நச்சினார்க்கினியர் உரைத்தவாற்றானும் இதனுண்மை தெரிக. 'காய்தலுவத்தலிலாளை' (திருவாய்மொழி) என்பதூஉம் இப்பொருட்டு.

# மடல் 1

*தி. பக்கிரிசாமி*

ஐயா, வணக்கம். அடுத்துள்ள கட்டுரையின் கருத்து விஞ்ஞானிகளும், மாண்டிசோறி, ஆடம்ஸ்மித்து போன்ற மேதைகளும் சொன்னவையே.

*கற்க கசடறக் கற்பவை கற்றபின்*

*நிற்க அதற்குத் தக.*

என்று தெரிவித்த திருவள்ளுவர் வாக்குப்படி 1. வாழ்ந்தவர்கள் 2. வாழ்பவர்கள் எத்தனைப் பேர்? ஒரு சிலரே இந்த நிலையை மாற்ற விஞ்ஞானிகள் கண்டுபிடித்த கண்டுபிடிப்பே கட்டுரையாகும்.

இங்கே வேறு பல எண்ணங்கள் ஏற்படலாம். (எழலாம்) எனினும் கட்டுரையின் செய்திக்கு உரிய உதாரணம் அல்லது ஒப்புநோக்கு : ராமன், பீமன் (புராண வீரர்கள்) நெப்போலியன் போன்றோர் வாழ்ந்த வரலாற்று வீரர்கள். இவர்கள் எந்த வீரரையும் வெல்லக் கூடியவர்கள் இவர்களை எவரும் வெல்ல முடியாது என்பது உண்மையே.

ஆனால் நவீன கண்டுபிடிப்பான துப்பாக்கி பீரங்கி கொண்டவன் எவனும் வெல்லலாம்.

இந்த முறையில்......

நவீன விஞ்ஞானிகள் மேதைகள் சொன்னபடி 1. அமைக்கும் வாக்கியம் 2. சொற்கள் 3. சொற்பொருள் கொண்டால்.

திருவள்ளுவர் தெரிவித்தபடி

*கற்க.... கற்பவை..... கற்றபின்*
*நிற்க அதற்குத் தக.*

என்ற கருத்து காணும் காட்சியாகும். இதுவே கட்டுரையாகும்.

## வாசகர்களுக்கு (ஆசிரியர்களுக்கு) ஒரு வேண்டுகோள்.

இக்கட்டுரையில் 7 + 8 பக்கங்களை முதலில் படித்தால் இக்கட்டுரையை படிக்கும் மனம் வரும்.

## பாடத்திட்டத்தில் அடிப்படைக் குறைபாடு

இக்கட்டுரை அனைவரையும் - படித்தபடி வாழத்தூண்டும் வாக்கிய வகை - என்ற நூலின் 1ஆம் பாடம்.

**படித்ததும் எழும் கேள்விகள்**

1. *கற்க கற்பவை கற்றபின் - நிற்க அதற்குத்தக*

   என்றெல்லாம் மகான்களும் மாமேதைகளும் போதித்த பொன்மொழிகளே பொதுமக்களிடம் போதிய அறிவைத் தூண்டாத நிலையில் இந்நூல் தூண்டுமா? என்ற கேள்விக்கு விடையே நூல்.

2. *இந்நூலாசிரியர் இந்நூலில் வரைந்த வாக்கியம் எது?..முன் உதாரணம் உண்டா?*

   ஆசிரியர் வரைந்த உதாரணம் பின்னாலும் முன் உதாரணம் அடுத்தும் காட்டப்படும். மேலும் அறிவை உண்டாக்கும், அல்லது தூண்டும் நூல்களை எவ்வாறு எண்ண வேண்டும்? என்பதை எப்படி ஒப்பிக்கிறோம்? கோவிலில் ''மந்திரங்களையும் தேவாரம் போன்றவைகளையும்'' ஒப்பிப்பதுடன், அக்கருத்துக்களின் அடிப்படையில்'' அறிவு தரும் நூல்களை இயற்றினால் ''படித்தபடி வாழத்தூண்டும் வாக்கியம், என்ற நூலை எழுதும் எண்ணமே எழாது, என்பதை அறிவு நூல்கள் எவை போன்றவை'' என்ற பாடத்தில் காட்டப்படும். இந்த 1ஆம் பாடத்தில் முன் உதாரணம் என்ற உரைகளில் ஓரளவு காட்டப்படும்.

### 3. *விரிவாக வரையவில்லை ஏன்?*

1-ஆம் பாடத்தலைப்பே காரணம். எனினும் முன் உதாரணத்தையும் மனிதரிடம் அறிவை உண்டாக்குவது? அல்லது எவைகளின் தொகுப்பு'' என்ற 2ஐயும் தலைப்பை தழுவியே காணலாம். தழுவி என்ற காரணம் இந்த 2-கருத்துக்களும்'' அடிப்படைக் குறைபாட்டுக்கு வித்துக்கள் என்பது முடிவில் தெரியும். எது போல? சில திரைப்படத்தின் பெயர்கள் (தலைப்புக்கள்) கடைசிக் காட்சியில் தான் வெளிப்படும் உதாரணம் - கல்யாணப்பரிசு.

### 4. *அனைவரையும் படித்தப்படி நடக்கச் செய்த உதாரணம் :*

உதாரணச் செய்தியும் ஆதாரமும் மட்டுமே வருமாறு. 19ஆம் நூற்றாண்டில் ஒரே நாளில் நாட்டு மக்கள் அனைவரையும் தன்னுடைய எண்ணப்படி வாழச் செய்த வாக்கியத்தை வேறு முறையில் அமைத்து அரசாங்க ஆணையாக வெளியிட்டு வெற்றிப்பெற்றார் கமால் பாட்ஷா. இது மட்டுமன்று ஒரே நாளில் மக்களை மாற்றிய (மாறச் செய்த) சிந்தனைச் செம்மல் என்று பொருள்படும்படி போற்றப்பட்டார் துருக்கிக் கமால் பாட்சா என்பது துருக்கியின் விடுதலைக்கான வரலாற்றில் காணலாம்.

### 5. *உதாரணமும் ஆதாரமும் என்ற காரணம்*

1. இந்த வாக்கியத்தை எந்த அடிப்படையில் அமைத்தார். 2. ஏனையவர்கள் ஏன் இவ்வாறு எழுதவில்லை? என்ற இயல்பான கேள்விகளையும், 3. கமால் பாட்சா தெய்வீக அருள் பெற்றதால் எழுதினார், இவ்வாறு வேறு எவராலும் எழுத முடியாது என்ற மதவாதம் சரியே என்றோ சரியா? என்றோ கருத்துக்களையும் நூலில் காணலாம்.

### 6. *அறிவு தரும் நூலின் அடிப்படை எது?*

இதுக் கூடத் தெரியாதா? என்று ஏளனம் செய்ய வேண்டாம். ஏனெனில் 1. இதை இன்று வரை - அல்லது அந்த 1-ஆம் பாடத்தின் நோக்கமான விஞ்ஞானிகளின் கண்டுபிடிப்பை காணும் வரை எவருமே காணவில்லை என்பதே இப்பாடத்தின் கருத்து. இதைக்

கண்ட பிறகு 2ஆம் கருத்தைக் காணலாம். மேலும் தலைப்பை செய்தி செய்தியாகக் காணலாம். 1-ஆம் செய்தியாக விஞ்ஞானிகளின் கண்டுபிடிப்பை காண்போம்.

## செய்தி - 1 : விஞ்ஞானக் கண்டுபிடிப்பு

மனிதன் எவ்வாறு கற்கிறான் அல்லத கற்றுக்கொள்கிறான் என்ற செய்தியை 20-ஆம் நூற்றாண்டில் விஞ்ஞானிகள் பல செயல்முறைகளால் நிறுவினார்கள் - என்ற செய்தி அல்லது கருத்து மட்டும் இங்கு போதும். மற்றவை பின்னால் வரும்- என்றதும், செய்திமட்டும் குறைபாட்டைக்காட்டுமா? என்ற எண்ணலாம் வாசகரே அறியுமாறு காணலாம் காட்டப்படும். மேலும், செய்தி 2இல் பெயரைப் பாருங்கள்.

## செய்தி - 2 : கண்டுபிடிப்பு பற்றிய நூலின் பெயர் வகைகள்

கண்டுபிடிப்புச் செய்திகளை விஞ்ஞானிகளும் நூலாசிரியர்களும் பின்காணும் முறைகளில் பெயர் (Name) வைத்துள்ளார்கள்.

1. *செய்தியையே பெயராக்கினார்கள் சிலர்.*

   கற்றதும் செயல்பாடும் (Learning and Performance) என்றே நூலின் பெயராக்கினார்கள்.

2. கற்றல் என்பது மனத்தின் செயல்களில் ஒன்றே என்ற எண்ணம் இருந்தது. இதனால் 'கற்றல் - பற்றிய செய்திகள் - உளவியலின் ஒரு பகுதி என்ற எண்ணத்தில் உளவியல் (Psychology) என்ற நூலில் ஒரு பகுதியாக (Part) ஆக கொண்டனர். சான்று +2 இரண்டாம் ஆண்டு உளவியல் பாட நூலில் 1-ஆம் பாடம் (அத்தியாயம்) என்றே உள்ளது.

3. கற்றல் - மனத்தின் செயல்களில் ஒன்றாகவே இருந்தாலும் 'தனிப்பட்ட நூலே ஆகும்' என்ற எண்ணத்திலே கற்றலைக் கொண்ட உளவியல் ( Psychology of Learning) என்று பெயரிட்டார்கள்.

4. மேலேயுள்ள பெயர்கள் 'தெளிவாக இல்லை' என்று கருதியவர் 'கல்வியுளவியல்' (Educational Psychology) என்றே பெயர் கொண்டார்கள்.

செய்தி 4இல் இவைகளை மீண்டும் காண வேண்டும்.

## செய்தி - 3 : பாடத்திட்டம் (Syllabus) - பாடப்பிரிவு தேவை

பண்டைய காலத்திலேயே ''கல்வி கரையில'' கணக்கில்லாதவை என்றும் பொருத்தமான ஒன்றைக் கற்க வேண்டும் என்றும் எல்லாவற்றையும் கற்கவும் முடியாது. கற்கத்தேவையோ பயனோ கிடையாது.

## செய்தி - 4 : கற்றல் - கருத்து கொண்ட பாடநூல்

படிக்கும் எல்லோருக்கும் வேண்டுமா? வேண்டாமா? அதாவது வரலாறு, கணிதம், மருத்துவம் என்றெல்லாம் கல்லூரியில், கணிதப்பாடத்துறையாக அல்லது கலையாக இருப்பது போல ''கற்றல்'' பாடநூல் இருக்க வேண்டுமா? வேண்டாமா? வாசகரே கூறட்டும்.

## செய்தி 5 :

கற்றல் பற்றிய எல்லாக் கருத்துக்களுக்கும் உரிய செயல்முறைகள் (Experiments) ஏனைய எல்லாப் பாடங்களுக்கும் தேவையில்லா கற்றல் பற்றிய செய்திகளை உபகரணமான - உப கருவியான (Ancillary) பாடநூலாக படித்தால் மட்டுமே விஞ்ஞானிகளின் கண்டுபிடிப்புப்படி, கற்கவும் கற்பிக்கவும் முடியும் என்பது சரியா? தவறா? (இதை செய்தி 7இல் மீண்டும் காணலாம்.)

## செய்தி 6 :

கற்றல் என்று விஞ்ஞானிகள் கண்டவை கற்பித்தலும் எவ்வாறு பொருந்தும் என்று கேட்கலாம்?

வருமாறு வரைந்தால் மட்டுமே விளங்கும். கற்றல் - கற்பித்தல் (Hearing Teachers) என்பன சொல்லளவில் வெவ்வேறே - ஆனால் செயலளவில் அல்லது செய்யுள் செயலில் ஒன்றே ஆகும். எப்படி?

அல்லது ஏன் -மற்றவர் செய்வதையோ சொல்வதையோ கேட்டுத் தானே தெரிந்து கொண்டு செய்வதும் சொல்லுவதும் கற்றல் - ஆகும். இப்படியில்லாமல் இப்படிச் செய், அப்படிச் செய்யாதே என்று மற்றவர் செய்தும் சொல்லியும் கற்றுக் கொடுப்பது கற்பித்தல் ஆகும். கற்றோ கற்பித்தோ செய்தாலும் சொன்னாலும் செயல் ஒன்றே ஆகும். உதாரணம் இவ்வாறுதான் வீட்டுவேலைகளையும், தொழில்களையும் செய்கிறோம். மேலும் 1. தொடக்கப்பள்ளி மாணவர்களில் ஒரு ஆசிரியர் இல்லாத போது பாடம் நடத்தும் செயல் கற்றலில் சேரும்' மேலும் பல விரிவுரையாளர்களும் பேராசிரியர்களும் B.Ed., M.Ed., படிக்காமலேயே சிறப்பாகவும் நடத்தும் செயலும் கற்றலில் தான் சேரும்.

**இச்செய்தி பின்னால் வரும்.**

## செய்தி 7 :

கணக்கு, மருத்துவம் போல ''உளவியல்' நூலைப் படிப்பவர்கள் ஏனைய பாடங்களை மாஸ்டர் படிப்பில் படிக்காமல் இருக்கலாம்.

இவ்வாறே மாஸ்டர் படிப்பில் கணக்கு போன்ற பாடங்களைப் படிப்பவர்கள் உளவியலைப் படிக்கத் தேவையில்லை.

கவனிக்கவும், தேவையில்லை என்று எழுதக் காரணம் சிலர் படிக்கலாம். மேலும் மருத்துவம், சட்டம் படிப்பவர்கள் படிக்கலாம்.

இக்கட்டுரைக்கு தேவை

## செய்தி 8 :

இக்காலநிலையில் 'கற்றல்' - அல்லது கற்பித்தல் பற்றிய நவீன கண்டுபிடிப்புகள்

1. உளவியல் அல்லது 2. கல்வி உளவியல் என்ற தனிப்பட்ட பாடமாக அல்லது துறைப்படிப்பாக ஆக்கியதால் ஏனைய பட்டதாரிகள் அறிய வாய்ப்பில்லை.

2. அறியாதது - படித்தவர்களில் குற்றமில்லை ஏனெனில் அவர்களுக்கு உளவியல் பாடமே இல்லை.

## செய்தி 9 :

பொதுப்பாடமாக உளவியலை ஆக்காத செயலால் விளைவு

1. கற்றல் பற்றிய விஞ்ஞான கண்டுபிடிப்பு உண்மையா? இல்லையா?

2. உண்மையென்றால் பொதுமைப்படுத்தாத செயல் குறைபாடு ஆகுமா? ஆகாதா?

3. கண்டுபிடிப்பு உண்மையில்லை என்றால் தனித்துறையாக்கி பாடநூலாக அமைத்தது நியாயமா?

4. இந்த விஞ்ஞான கண்டுபிடிப்பு உளவியல் கருத்து என்ற காரணத்தினாலோ மொழி பெயர்க்க உதவிய தமிழ் (பேர்) ஆசிரியர் உளவியலை அறியாத காரணத்தாலோ மொழி பெயர்த்த வாக்கியமே கண்டுபிடிப்புக்கு மாறுபட்ட நிலையில் இருப்பதை பாடத்தில் காட்டப்படும்.

5. உளவியலை நினைக்காத விஞ்ஞானிகள் கி.பி. 1986ஆம் ஆண்டுவாக்கில் இதே கண்டுபிடிப்பை மீண்டும் ஆராய்ந்து கண்டனர்.

6. இந்த கண்டுபிடிப்பு இன்னும் பாடநூலில் இடம் பெறவில்லை என்பதை பின்னால் காட்டப்படும்.

9 (II) *அதிசயம் ஆனால் உண்மை என்ற முறையில் அமைந்த செய்தி அடுத்த செய்தி*

## செய்தி 10 :

விஞ்ஞானக் கண்டுபிடிப்பு மேற்கோள் (Quotation) +2 உளவியல் பாடத்தில் கற்றல் பற்றிய செய்தி பின்வருமாறு உள்ளது.

கற்றலின் வகை - மனிதன் பரிணாமச் செயல்முறையின் மிக உயர்ந்த இடத்தில் இருத்தப்பட்டிருக்கிறான். இருப்பினும் அவன் கீழ் மட்டங்களில் உள்ள விலங்குகள் பயன்படுத்தும் அதே செயல்

முறைகளைத்தான் தன் கற்றலில் பயன்படுத்துகிறான் - என்ற வாக்கியங்கள் இருக்கின்றன.

குறிப்பு : இந்தக் கண்டுபிடிப்பை 1. தொல்காப்பியர் 2. ஆடம்ஸ்மித்து. 3. மாண்டிசோரி சிறு குறைவுடன் எழுதியுள்ளார்கள் என்பதையும் இன்னும் எவரும் காணவில்லை என்பதையும் ஆதாரத்துடன் பின்னால் காணலாம். காட்டப்படும்.

## செய்தி. 11 : இப்பாடத்தின் கருத்து

1. வாக்கிய நடையும், சொல்லமைப்பும் - மேற்கண்ட மொழிபெயர்ப்பு வாக்கியம் எப்படி இருக்கிறது என்றால் திருக்குறள், சிலப்பதிகாரம் போன்ற நூல்களுக்கு பண்டைய உரைகாரர்கள் வரைந்த உரையைப் போல அல்லது ஓரளவு ஒத்த நடையில் இருக்கிறது என்பதை அடுத்த பாராவில் நேரடி அனுபவமாக காணலாம். மேலும் இந்த வாக்கியம் +2 இரண்டாம் ஆண்டு பாடநூல் என்ற வகுப்புக்குரிய (Standard) நிலையில் வரையப்பட்டது என்பதில் ஐயமில்லை. புலவர்கள் போற்றும் வாக்கியங்களே.

இந்த வாக்கியம் கடிநடையானது என்பது பின்வரும் செய்முறைகளால் அல்லது நேரடி அனுபவங்களால் நீங்களே காணலாம்.

1. இந்த உளவியல் பாடத்தை படிப்பவர்களில் 10 அல்லது 12 மாணவர்களைப் படிக்கச் சொன்னால் - பழைய, அகநானூறு முதலிய செய்யுட்களைப் படிப்பது போலவே தடுமாறுவார்கள்.

2. பனிரெண்டாம் வகுப்புக்கு பாடம் நடத்துகிற படித்த ஆசிரியர்களைப் படிக்கச் சொல்லுங்கள். அவர்களின் விடையையும் கேளுங்கள்.

எனவே செந்தமிழை வளர்க்கும் முறையில் அமைத்த வாக்கிய வகைகளே பாடநூலில் உள்ளன என்பதை இந்நூல் மறுக்கவில்லை.

**2. இந்நூலின் (கட்டுரையின்) விமர்சனம்**

(செய்தி 8ஐயும், 9ஐயும் நினைப்பூட்டும் முறையிலேயே காணலாம்.

மேற்கண்ட கண்டுபிடிப்பு வாக்கியத்தை பழைய செந்தமிழ் வாக்கியம் என்ற எண்ணத்தில் செய்யுளுக்குரிய கருத்தை எளிய நடையில் எழுதுவது போலவும் அல்லது மாணவர்களே கண்டுபிடிப்பின் செய்தியை தெரிந்துகொள்ளும்படி எளிய நடையில் எழுதினால் படிக்கிற ஆசிரியர்கள் விரிவுரையாளர்கள் அல்லது பேராசிரியர்கள் ஏற்காமல் மறுப்பார்கள். இதனால் கண்டுபிடிப்புக்குரிய கருத்தை கண்டுபிடித்த 1. செய்முறைகள் 2. செய்முறை பற்றிய விளக்கங்கள் ஆகியவற்றை பற்றிய வாக்கியங்கள் பாடநூலில் எளிமையாக இருப்பதை தொகுத்துக் காட்டி இவைகளால் மனிதன் எவ்வாறு கற்றுக் கொள்கிறான் என்பதை காட்டுகிறேன். அதன் பிறகு மனிதன் பரிணாம வளர்ச்சி என்ற பாராவில் இருக்கிற வாக்கியங்களுக்கு உரையைப் போல (Meaning) காட்டுகிறேன். அப்பொழுது உளவியல் நூலில் உள்ள வாக்கியம் கண்டுபிடிப்புக்கே முரணானது என்பது விளங்கும். அதாவது அந்த விளக்கம் கொடுத்தால்தான் விளங்கும். ஆயினும் அதற்கு பொருத்தமான உதாரணம் காட்டுகிறேன். அந்த உதாரணமும் புரியாவிட்டால் நான் விவரிக்கும் போது நிச்சயமாக விளங்கும்.

**3. உதாரணம் பின்வருமாறு**

விற்பனை பலகைகள் விற்கக்கூடிய கடையில் இரண்டு விளம்பரங்கள் உள்ளன. 1-வது விளம்பரம் பொதுவாக அந்தக் கடையின் வாசலில் தொங்கும் செய்தி - இந்தக்கடையில் விற்பனை செய்கிற எல்லா பலகைகளும் அசல் பர்மா (மியான்மர்) தேக்கு மரங்களே ஆகும். மேலும் எழுதப்பட்டுள்ள எழுத்துக்கள் அனைத்தும் உலகப்புகழ் பெற்ற ஜெர்மனி, அமெரிக்கா போன்ற கம்பெனிகள் தயாரித்த வர்ணப்பசையே (பெயிண்டே) ஆகும். இவ்வாறு தொங்குகிறது. 2. கடையின் உள்ளே இருக்கும் விளம்பரப்பலகை இந்த அடுக்கில் பொதுவான விளம்பரங்களை நாங்களே எழுதி வைத்திருக்கிறோம். எடுத்துப்பாருங்கள் என்ற அடுக்கில் இருக்கிற ஒரு விளம்பரச் செய்தி - இந்த நிறுவனத்தில் பயன்படுத்தும் எல்லா பொருட்களும் சுதேசிப் பொருள்களே - இந்தியாவில் தயாரிக்கப்பட்டதே என்ற விளம்பரப் பலகை இருக்கிறது.

இந்த அடிப்படையில் இந்த நூல் வாக்கிய இலக்கணம் கொண்டது என்ற அடிப்படையிலும் இலக்கணத்தில் உதாரணம் காட்டுகிறேன்.

## படித்தபடி சிந்திக்கச் செய்த செய்த உதாரணம்

இங்கே தெரிய வேண்டிய செய்தி தமிழில் உவமை உருபுகள் மொத்தமே 70-80 (எழுபது-எண்பது) இருக்கலாம் என்றே என்னிடம் 300-க்கும் மேற்பட்ட தமிழாசிரியர்கள், விரிவுரையாளர்கள் சில பேராசிரியர்கள் சொன்னார்கள். மேலும், இந்த கருத்து திருத்தக்கத்தேவர், கம்பர், நச்சர், உ.வே. சா. போன்ற மேதைகளைக் குறிக்காது என்ற அளவு போதும். அதாவது தொல்காப்பியம், தண்டியலங்காரம் போன்ற மகான்களும், மாமேதைகளும் இயற்றிய நூல்கள் மொத்தமே 70-80 சொற்கள் மட்டுமே என்ற அளவில்தான் தூண்டின. இந்த அடிப்படையில் என் கட்டுரையின் தலைப்பு.

உவமை உருபுகளை காணும் வழி என்ற 7 பக்கக் கட்டுரையை படித்ததும் குறைந்தது 100 சொற்கள் அலைமோதலாம் - மனதில், மேலும், இடைவெளிவிட்டு 10-12 மணிநேரம் கட்டுரைப்படி பாடுபட்டால் 500க்கும் மேற்பட்ட சொற்களை தொகுக்கலாம். நம்புவதற்காக படித்துப் பாருங்கள்.

### கட்டுரை - 2

## தொழிற்பெயர் விகுதிகளை காணும் வழி

தொழில் பெயர் விகுதிகள் மொத்தமே 18ம் பிறவும் என்கிறார்கள். அதாவது 18+9 = 27க்கு மேல் கிடையாது என்கிறார்கள். ஆனால் 200க்கு மேலும் உண்டு. மேலும் தொழிற்பெயர் விகுதிகள் 10க்கும் மேற்பட்ட பொருட்களில் வருகின்றன.

இந்த இரண்டு கட்டுரையையும் படித்துவிட்டு என் கற்பனை சரியென்றால் கட்டுரை வெளியிடவும்.

### கட்டுரையின் கேள்வி

பொது விளம்பரத்திற்கும், இந்த விளம்பரத்திற்கும் முரண்பாடு இருக்கிறதா? இல்லையா? இச்செய்திகளை 2-ம் பாகத்தில் தெளிவாக காட்டுகிறேன்.

நூலாசிரியரின் உதாரணம் அதாவது படித்தபடி சிந்திக்கச் செய்யுமாறு அமைத்த உதாரணம். இந்த உதாரணத்தைக் காணும் முன்பு வருகிற செய்திகளை நினைவில் கொள்ள வேண்டும். அந்தச் செய்தியை உதவி செய்யும் உதாரணமாக எண்ணுமாறு வேண்டுகிறேன்.'

## உதாரணச் செய்தி :

ஒருவர் இங்கிலாந்திலேயே பிறந்து வளர்ந்து பட்டம்பெற்று பேராசிரியராக இருக்கிறார். மேலும் பிரபலமான எழுத்தாளரும், கவிஞரும் ஆவார். இத்தகைய பேராசிரியர் சென்னையில் தங்குகிறார். அப்போது ஒரு நிருபர் அவரிடம் ஐயா, தங்களுடைய சிறப்பான ஆங்கிலக் கட்டுரை வெளியிட விரும்புகிறோம். 2 அல்லது 3 பக்கம் இருந்தால் போதும் என்று கூறிவிட்டு, அப்பொழுது தமிழ்நாட்டில் இடம்பெற்ற ஒரு சிக்கலை அல்லது பிரச்சினையை கூறி அதுபற்றி கட்டுரை கேட்கிறார். இதைக் கேட்டதும் அந்த பேராசிரியர் பேந்தப் பேந்த விழிக்கிறார். எழுதத் தெரியாது என்ற கருத்தை முகத்தில் காட்டுகிறார்.

இப்படி அவர் தவிக்கிற காரணம் 1. ஆங்கிலத்தில் எழுத முடியுமா என்று தவிக்கிறார். என்பது சரியா அல்லது 2. நிருபர் கேட்ட பிரச்சனை என்ன என்றே தெரியவில்லையே எப்படி எழுதுவேன், எதை எழுதுவேன் என்று தவித்தார் என்பது சரியா?

## விடை வெளிப்படை

அதாவது வாக்கியம் வரைவது மொழியின் இலக்கணம் சார்ந்த செயல். இலக்கணம் தெரிந்தால் போதும். ஆனால் ஏதேனும் ஒரு பொருளையோ செயலையோ பற்றி எழுதுகிற செயலுக்கு, அந்த பொருளைப் பற்றியோ, செயலைப் பற்றியோ் தெரிந்திருக்க வேண்டும் என்பதே உண்மையாகும்.

இந்த முறையில் படித்தப்படி வாழச் செய்யும் வாக்கியத்தை எவ்வாறு எழுதலாம் என்பதே இந்நூலுக்கு உரிய செய்தி ஆகும். அந்த செய்தியைப் படித்த கணக்குப் பட்டதாரி தான் கணக்கில் படித்தபடி சிந்திக்கும் வாக்கியத்தை வரைய வேண்டும். இவ்வாறே Science பட்டதாரிகளே இந்த நூலை அனுசரித்து அறிவியலை மொழிபெயர்க்க வேண்டும் என்ற செய்தியை அடுத்த பாடங்களில் தெளிவாகக் காட்டுவேன்.

# கண் !

*ஆறுவிரல் ஐம்பொறி*

மெய், வாய், கண், மூக்கு, செவி என்பன ஐம்பொறிகள். இவற்றுள் கண் தவிர மற்ற நான்கு பொறிகளும் நின்று பற்றும் பொறிகள் ஆகும். கண் மட்டுமே சென்று பற்றும் பொறி ஆகும். கண் அழகான உறுப்பு. மிக அவசியமான உறுப்பு. கண்ணுக்கு பாவலர்களும் நாவலர்களும் பல உவமைகளைக் கூறியிருக்கின்றனர். அருணகிரிநாதரும் கண்ணுக்கு உவமை கூறியிருக்கின்றார். இவர் கண்ணுக்கு உவமை கூறியதில் உள்ள பொருட் சுவையைக் காணலாம்.

கண்ணுக்கும் உவமைகளுக்கும் போட்டியாம். இப்போட்டியில் கண் வெற்றி பெற்றதாம். உவமைகள் தோற்றுவிட்டதாம். தோற்றுவிட்ட உவமைகளுக்கு தண்டனை கிடைத்ததாம். இந்தக் கற்பனையே அருணகிரிநாதரின் சிந்தையில் உதித்தது. இந்தக் கற்பனையை மையப்படுத்தி இவர் சில சுவைமிகுந்த உவமைகளைக் கூறுகின்றார்.

கண்ணிடம் தோற்றதாக இவர் கூறும் உவமைகளும் தோற்றதால் உவமைகள் பெறும் தண்டனைகளும் வருமாறு.

| *வ.எண்.* | *உவமைகள்* | *தண்டனைகள்* |
|---|---|---|
| 1. | கடல் | சிறை வைக்கப்பட்டது. (கரையால்) |
| 2. | வண்டு | உடலில் பொறியிடப்பட்டது (விலங்கிடப்பட்டது) |
| 3. | தாமரை | மலர்த்தப்பட்டது (விரிதலால் கிழியப்பட்டது) |
| 4. | நஞ்சு | உண்ணப்பட்டது (இரப்பவர் (சிவன்) உணவு) |
| 5. | கயல் | குளத்துப்படுத்தப்பட்டது (குளத்துள் வாழ்க்கைப்பட்டது) |

| வ.எண். | உவமைகள் | தண்டனைகள் |
|---|---|---|
| 6. | மான் | ஓட்டுவிக்கப்பட்டது (காட்டுக்கு) |
| 7. | அம்பு | கடைவிக்கப்பட்டது (மரத்தைக் கடைந்து அம்பு செய்யப்பட்டது) |
| 8. | மாம்பிஞ்சு | உப்பிலிடப்பட்டது (ஊறுகாய் ஆக்கப்பட்டது) |
| 9. | வேல் | நெருப்பில் காய்ச்சப்பட்டது (செய்வதற்கு) |
| 10. | இயமன் | சிவனால் உதைக்கப்பட்டான் (மார்க்கண்டேயனுக்காக) |
| 11. | வாள் | முறிக்கப்பட்டது (போரில்) |
| 12. | ஆந்தை | அலறும்படியானது (துன்பத்தால் அலறுதல்) |

கண்ணுக்கும் உவமைகளுக்கும் நடைபெற்ற பன்னிரண்டு போட்டிகளிலும் கண்ணே வெற்றி பெற்றது எனவும் பன்னிரண்டு உவமைகளுள் தோற்று தண்டனை பெற்றது எனவும் அருணகிரி நாதர் கூறியிருக்கின்றார். இவரின் உவமை கூறும் முறை கற்பனையின் சிகரம் அல்லவா!

உவமைகளில் இயற்கையாக உள்ள குறைகளை கண்ணிடம் தோற்றதால் கொடுக்கப்பட்ட தண்டனை என்று இவர் சமத்காரமாகவும் நயமாகவும் அருமையாகவும் கூறியிருப்பதை நினைந்து நினைந்து நெஞ்சம் நெகிழலாம்.

இக்கருத்துள்ள பாடலை திருப்புகழில் திருப்பழனிமலை என்ற தலைப்பில் கடலை சிறைவைத்து என்று தொடங்கும் பாடலில் காண்க.

இறைபக்தி இல்லாதவர் கூட இலக்கிய நயத்திற்காக திருப்புகழ் படிக்கலாமே.

# தாய்த் தமிழைச் சேய்கள் மறந்ததேன்?

கவிவேந்தர் கா. வேழவேந்தன்

*தமிழ்கூட மண்மீதில் இழைத்துவிட்ட
தவறொன்றும் உண்டென்றார் அறிஞர் அண்ணா !
'தமிழ்செய்த தவறென்ன?' என்றால் அஃது
தமிழனுக்குத் தாய்மொழியாய் வாய்த்த தொன்றே !
அமிழ்தனைய இலக்கியங்கள் குலுங்கி நிற்கும்
அழகுதமிழ் இந்நேரம் ஐரோப் பாவில்
அமைந்துள்ள ஒருநாட்டில் பிறந்தி ருந்தால்
அகிலமொழி எனஓங்கி இருக்கும் !' என்றார் !*

*வாய்மொழியாய்த் தாய்மொழியைப் பேசு தற்கும்
வக்கில்லாத் தமிழ்நண்பா ! ஒன்று கேட்பேன்;
சேய்களெலாம் தாய்த்தமிழை மறந்தே பாழும்
தேம்சுமொழி ஆங்கிலத்தில் பேசல் ஏன்? ஏன்?
போய்அவரைக் 'கான்வெண்ட்'டில் சேர்த்து விட்டுப்
புலம்புவதும் நடிப்பலவா? சுரைவி தைத்தால்
காய்வேறு காய்த்திடுமா? தமிழா ! உன்றன்
காதையதன் பாதையினை மாற்று வாயா?*

*உலகமதில் 'சப்பா'னும் 'செருமன்' நாடும்
ஒப்பரிய முன்னேற்றம் காண்ப தேன்?ஏன்?
துலங்குகின்ற தாய்மொழியின் வழியில் கல்வி
தொடக்கமுதல் இறுதிவரை கற்ப தால்தான் !
பல ஆண்டும் முன்னாலே கடையைக் கட்டிப்
பரங்கியனோ போய்விட்டான்; எனினும் அன்னோன்*
**விலங்குமொழித் தளையுள்ளே வீழ்ந்து மாய்தல்
வெட்கமென்றே கணமேனும் சிந்தித் தாயா?**

# ஞானக்கூத்தன் கவிதைகளில் தொழிலாளர் நிலை

*சா. இளையராஜா*
அண்ணாமலை நகர்

## முன்னுரை

தமிழ் மண்ணில் பொதுவுடைமைச் சிந்தனைகள் தோன்றி வளர்ந்து வருகின்றன. கவிதை வரலாற்றில் பொதுவுடைமைக் கட்சியைச் சார்ந்த கவிஞர்களில் குறிப்பிடத்தக்கவர்கள் இருக்கிறார்கள். மார்க்சீயக் கொள்கையினால் ஈர்க்கப்பட்டுத் தொழிலாளர்களின் நலன் கருதியும், அவர்களின் வாழ்க்கைச் செம்மையுறவும் பாடுபட்டு வருகின்றனர். நடைமுறை வாழ்விலும் பொதுவுடைமையை காண தொண்டாற்றியும் தம் படைப்புகளில் வலியுறுத்தியும் வருகின்றனர். இத்தகைய படைப்பாளரான ஞானக்கூத்தன் கவிதைகளில் காணப்படுகின்ற பொதுவுடைமை சிந்தனைகளை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## மார்க்சீயம் விளக்கம்

செர்மானிய அறிஞர்களான கார்ல் மார்க்சும், பிரெடரிக் எங்கெல்சும் சேர்ந்து உருவாக்கிய சமூகவியற் கருத்துக்களின் கோவையை மார்க்சீயம் என்று வழங்கப்படுகிறது.

மார்க்சீயத்திற்கு முன்னர் எழுந்த தத்துவங்கள் எல்லாம் உலகைப் பற்றியும், மனிதனைப் பற்றியும் சிந்தித்திருக்கின்றன.

1) *இயக்கவியல் பொருள் முதல் வாதம்*
2) *வரலாற்றுப் பொருள் முதல் வாதம்*
3) *அரசியல் பொருளாதாரம்*

## இயக்கவியல் பொருள்முதல்வாதம்

இயற்கை, மனிதன், எண்ணம் மூன்றினைப் பற்றியும் இவற்றின் இடையே நிகழும் உறவுகள், மாற்றங்கள் பற்றியும் ஆராய்ந்து பொதுவான உண்மைகளை வெளியிடுகிறது.

## வரலாற்றுப் பொருள்முதல்வாதம்

வரலாறு என்பது மன்னர்கள், தலைவர்கள், மற்றும் தனி மனிதர்களைப் பற்றியதாகவே அமைகிறது. சமூகக் கருத்துகளும் சிந்தனைகளும் வரலாற்றை இயக்குவனவாகவே கருதப்பட்டது. இயக்கவியல் பொருள்முதல்வாதம் வரலாற்றுக்குப் பொருந்தும் என்று மார்க்சீயம் நிறுவியது.

''மனிதனுடைய சமூகச் செயல்களால் வரலாறு இயங்குகிறதேயொழிய, சமூகக் கருத்துக்களால் அல்ல என்ற உண்மையை அது தெளிவாக்கியது. மக்களின் ஒருங்கிணைந்த முயற்சியினால் நிகழும் செயல்களே வரலாறு என்பதும் மார்க்சீயத்தின் கொள்கையாகும் என்று ''சமூகவியல் கொள்கையில்' நா. வானமாமலை கூறியுள்ளார்.

## அரசியல் பொருளாதாரம்

சமுதாய மாற்றங்கள் மார்க்சும், எங்கெல்சும் வாழ்ந்த காலங்களில் தீவிரமாக நிகழ்ந்ததாகக் கூறப்படுகின்றன. அதனால் சமுதாய மாற்றங்களையும், முதலாளித்துவத்தின் தோற்றத்தையும் விளக்கி 'மூலதனம்' என்ற நூலை கார்ல்மார்க்ஸ் எழுதினார். இத்தகைய மூலதனத்தில் பொருளாதாரம் பற்றியும், முதலாளித்துவத்தின் சமுதாய அமைப்பு மற்றும் நெறிகளைப் பற்றியும் கூறப்பட்டுள்ளன.

## தொழிலாளர்கள்

தொழிலாளி என்பவன் வயிற்றுப் பிழைப்புக்காக உடல் உழைப்பை விற்பவன் என்பதை உணரலாம்.

பாரதியார் காலத்தில் முதலாளித்துவச் சுரண்டல் பரவலாக காணப்பட்டது. தனிமனிதர்கள் மட்டுமின்றி முழுநாடே சுரண்டப்பட்டது. இத்தகைய சுரண்டலைப் பற்றி 'தனியொருவர் பிறர் ஒருவரைச் சுரண்டுதல் எந்த அளவுக்கு ஒழிக்கப்படுகிறதோ, அதே அளவுக்கு ஒரு

தேசம் பிறிதொன்றைச் சுரண்டுதலும் ஒழிக்கப்படும்' என்று மார்க்சும் எங்கெல்சும் கூறுகின்றனர்.

இத்தகைய சுரண்டலைக் கண்டு கொதித்தெழுந்த பாரதியார்,

*'மனித ருணவை மனிதர் பறிக்கும்*
*வழக்கம் இனியுண்டோ*
*மனிதர் நோக மனிதர் பார்க்கும்*
*வாழ்க்கை இனியுண்டோ'*

என்று பாடினார். இத்தகைய சுரண்டுதலால் பாதிக்கப்பட்ட நடுத்தர வர்க்கத்தில், பள்ளிக்குச் செல்லும் பையன் உணவு இடைவேளையில் வருவதாகத் தன் தாயிடம் கூறுகிறான். தாய் மதிய உணவு வீட்டில் இல்லை நீ ஏன் வீட்டிற்கு வருகிறாய், வர வேண்டாம் என்பதாக நடுத்தர வர்க்கத்துக் குடும்ப நிலையை ஞானக்கூத்தன் படம் பிடித்துக் காட்டுகிறார்.

*'மத்தியானம் வருவேன்' மா*
*வெயிலில் வெந்து சாகாதே*
*மத்தியானம் வருவேன் நான்*
*பத்துப்பானை தேய்ப்பதற்கா?'*

என்பதன் வழி தொழிலாளர்களின் நிலையைக் காணமுடிகிறது.

## எலிக்கறி

சமுதாயத்தில் உழைக்காமலே பலபேர் ஆடம்பரங்களுடன் நல்ல உணவுகளை உண்கின்றனர். வசதியாய் வாழ்கின்றனர். ஆனால், உழைக்கும் வர்க்கம் காலம் நேரம் பார்க்காமல் உழைத்து இரு வேளை உணவு கூட உண்ண முடியாமல் கூரைகளில் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். இன்று எலிக்கறிகளைத் தின்பதால் பிளேக் போன்ற நோய்கள் வருகிறது என்று சொல்லியும் இவர்கள் எலிகளைத் தேடியே செல்கின்றனர். இதற்கெல்லாம் காரணம் முதலாளித்துவத்தின் சுரண்டுதலே ஆகும். இவ்வாறான கொடுமைச் செய்திகளை ஞானக்கூத்தன் தன் கவிதையில் உணர்த்தியுள்ளார்.

*'நாங்கள் நாலுபேர் எலிகளைத் தின்றோம்'*

என்பதன் மூலம் சமுதாயத்தில் தொழிலாளர்களின் நிலைமையைக் காணமுடிகிறது.

இத்தகைய கொடுமையைக் கண்ட பாரதியார் சுரண்டலில்லாச் சமுதாயத்தைக் காண விழைந்தார். தனி ஒருவன் பசியோடும் பட்டினியோடும் கிடக்கும் போது அவர்களைப் பற்றிக் கவலைப்படாமல் வேடிக்கைப் பார்க்கும் இந்த உலகத்தினை அழித்திடுவோம் என்று வெகுண்டெழுந்தார்.

*'இனியொரு விதி செய்வோம் - அதை*

*எந்த நாளும் காப்போம்*

*தனியொருவனுக் குணவில்லை யெனில்*

*ஜகத்தினை அழித்திடுவோம்'*

என்று தன் கவிதையில் ஆதங்கத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

**வறுமை**

வயல் வரப்புகளை நெறிப்படுத்தி, நீர்தேக்கி, விளைவித்துக் கொடுப்பான், மலை பிளந்து, கனிகள் வெட்டி பற்பல கருவியெலாம் செய்து கொடுப்பான். கடல் முத்தெடுத்துக் கொடுக்க உயிரையே விடுவான் என்று தொழிலாளர்களின் உழைப்பைப் பற்றி பாரதிதாசன் கூறுகிறார். இப்படிப் பல கவிஞர்களாலும், பல அறிஞர்களாலும் பெருமைப்படுத்தப்பட்ட தொழிலாளர்கள், அடிப்படை தேவைகள் இன்றி வறுமையில் வாடுகின்றனர். உடல் இளைத்து இளமையிலே இறந்து விடுகிறார்கள் இந்த நிலையை ஞானக்கூத்தன் கூறும்போது,

*'ஏணியைப் போல் இருந்திருப்பான், ஆறடிக்குக்*

*குறைவில்லை*

*இது கபாலம்*

*மார்புக் கூடு*

*போணிசெய்த பெருங்கைகள்*

*கைகால் மூட்டு*

*பூரான்போல முதுகெலும்பு'*

என்று கூறுகிறார் இதன் வழி பார்க்கும் போது தொழிலாளர்கள் வறுமையால் வாடி பாதி வயதில் இறக்கும் நிலையைக் காணலாம்.

## உரிமை மறுப்பு

உழைப்பையும், உழைக்கும் சமூகத்தையும் போற்றுகிறது மார்க்சீயம். உழைக்கும் தொழிலாளர்களை எல்லாம் 'பிரமதேவன்கலை' என்று பாராட்டுகிறார் பாரதியார்.

*'அரும்பும் வேர்வை யுதிர்த்துப் புவிமேல்*
*ஆயிரம் தொழில் செய்திடுவீரே*
*பெரும்புகழ் நுமக்கே இசைக்கின்றேன்*
*பிரமதேவன் கலை இங்கு நீரே'*

என்ற பாரதியார் வரிகள் தொழிலாளர்களைப் பெருமைப்படுத்துவதாக அமைகிறது. ஆனால், உழைக்கும் வர்க்கம் உழைக்க மட்டுமே வேண்டும். கொடுப்பதையே வாங்கிக் கொள்ள வேண்டும். உழைப்புக்கேற்ற ஊதியம் கேட்டால் தண்டிக்கும் நிலைமைக் காணப்படுகிறது.

கீழ் வெண்மணியில் தன் உழைப்புக்காகக் கூலி கொஞ்சம் அதிகமாக சேர்த்துத் தர வேண்டும் என்று கேட்டதற்காக அவர்கள் தூங்கும் போது நடு இரவில் வீட்டைப் பூட்டி அவர்களின் கூரைகளுக்குத் தீ வைத்தனர். இதனால், நாற்பத்தி நான்கு தொழிலாளர்கள் இறந்தனர். இந்தக் கொடூரச் சம்பவம் தொழிலாளர்களின் உரிமை மறுப்பையே வலியுறுத்துவதை அறியலாம். இந்த கொடுமையான நிகழ்ச்சியைக் கண்ட ஞானக்கூத்தன் பொதுவுடைமையக் கருத்தில் கொண்டு வெண்மணி கொடுமையை இவ்வாறு கூறுகிறார்.

*'மல்லாந்த மண்ணின் கர்ப்ப*
*வயிறெனத் தெரிந்த கீற்றுக்*
*குடிசைகள் சாம்பற் காடாய்ப்*
*போயின*
*..................*
*.....................*
*குருவிகள் இவைகள் என்றார்*
*குழந்தைகள் இவைகள் என்றார்*
*பெண்களோ இவைகள்? காலி*
*கன்றுகள் இவைகள் என்றார்'.*

இதன்வழி தொழிலாளர்களை எரித்து சாம்பலாக்கியதை அறியலாம்.

## பொதுவுடைமையின் தேவைகள்

'சமதர்மம்', சமத்துவம் இல்லாத காரணத்தினாலே மனித சமுதாயத்தில் மனக்கவலை ஏற்படுகிறது என யோகிஸ்வரன் கூறுகிறார்.

தொழிலாளர்களின் கவலையும், தொல்லையும் தொலைய வேண்டுமானால், முதலாளித்துவம் என்பது அடியோடு ஒழிந்தே தீர வேண்டும் எனக் கூறியுள்ளனர்.

தொழிலாளர்களின் வேலைவாய்ப்பு இன்மையாலும், வேலை கிடைப்பினும் உரிய கூலியின்றியும் அவதிப்படுகின்றனர். இதனால், உணவுக்காகவே காலம் முழுவதும் இவர்கள் போராட வேண்டி இருக்கிறது.

*'சில தொழிலாளர்களின் வேலை இருந்தால் தாங்களே*
*முன்வந்து வேலையை முடித்துவிட்டு ஊதியம்*
*கேட்பார்கள். உன்னை யார் செய்யச் சொன்னதென்று*
*கேட்டால் அதைப் பொருட்படுத்தாமல் ஒரு - தேநீருக்காவது*
*கொடுங்கள் என்று கேட்பார்கள்'.*

இத்தகைய கொடுமை வாழ்க்கை வாழும் தொழிலாளர்களின் நலனுக்காக நாம் பொதுவுடைமையின் தேவைகளை அறியலாம்.

## முடிவுரை

தொழிலாளர்கள் நலிந்து கொண்டே வருகிறார்கள். முதலாளிகள் உழைப்பைச் சுரண்டி வளர்ந்து கொண்டே செல்கிறார்கள். இந்த நிலை மாற வேண்டுமானால், தொழிலாளர்கள் நலன் காக்கப்பட வேண்டுமானால், தொழிலாளர்களின் எண்ணிக்கையைக் கருத்தில் கொண்டு, அவர்களை மேம்படுத்த புதிய திட்டங்களை நாம் உருவாக்க வேண்டும்.

# தமிழ்ச்சங்க வரலாறு

*பேராசிரியர் திரு. ஆ. கார்மேகக்கோன்*
மதுரை

*நான்காம் தமிழ்ச்சங்க பொன்விழா மலர்க்கட்டுரை*
***வாசகர்களின் விருப்பத்திற்கிணங்க மறுபதிப்பு செய்யப்பட்டுள்ளது.***

உலகப் படைப்பில் முதற்கண் தோன்றியது தமிழகம் என்பது அறிஞர் பலருடைய துணிபு.

இந்நாட்டை ஆண்ட அரசர்கள் சேர, சோழ, பாண்டியராவார். இவர்களது தொன்மையை விளக்குங்கால் ஆசிரியர் பரிமேலழகர்,

*''வழங்குவ துள்வீழ்ந்தக் கண்ணும் பழங்குடி*
*பண்பில் தலைப்பிரிதல் இன்று''*

என்னும் குறள் உரையில், ''தொன்று தொட்டு வருதல், சேர, சோழ, பாண்டியர் என்றாற் போலப் படைப்புக் காலந் தொடங்கி மேம்பட்டு வருதல்'' என்று கூறியுள்ளார். இங்ஙனம் அவர் கூறியது தொன்னூல்களின் வாயிலாக அவ்வாசிரியர் தமிழ்நாடு, தமிழ் மக்கள் இவர்களது தொன்மையை நன்கு ஆராய்ந்து கண்ட உண்மை முடிபினாலேயாம். ஆகவே தமிழ் மக்களது தொன்மை ஒரு கால வரம்பிற்கு உட்பட்டதன்று என்பது தெளிவாகும்.

பண்டைத் தமிழ் நாட்டின் தெற்கெல்லை இப்போது கடற்குமரித் துறையிலிருந்து தெற்கே பலகாத தூரம் பரவி இருந்தது. அப்பகுதி அக்காலத்தில் குமரிநாடு முதலாக நாற்பத்தொன்பது நாடுகளாகப் பிரிவுண்டிருந்தது. அப்பகுதியில் தென்மதுரை யென்னும் நகரம் பாண்டியர்களது கோநகரமாகப் பன்னூறாண்டுகள் விளங்கியிருந்தது. அந்நகரத்திலேயே தலைச் சங்கத்தைப் பாண்டியர்கள் நிறுவி நாட்டு மக்களுக்குக் கல்விவளர்ச்சி புரிந்துவந்தார்கள். முதற்சங்கத்தை நிறுவியவன் காய்சினவழுதி என்னும் பாண்டியன். இச்சங்கத்தில் அகத்தியனார், முரஞ்சியூர் முடிநாகராயர் முதலிய நூற்றுக்கணக்கான புலவர்கள் வீற்றிருந்து தமிழ் ஆராய்ந்து எண்ணிறந்த நூல்களை இயற்றி வெளியிட்டனர். இத் தென்மதுரையில் இத்தலைச்சங்கம் பல்லாயிரம்

ஆண்டுகள் நடைபெற்றது. இச்சங்கத்தின் இறுதியில் இருந்தவன் கடுங்கோன் என்னும் பாண்டியன். இவன், இத்தென் மதுரையைக் கடல் கொண்டமையின், பஃறுளியாறு, குமரியாறு என்னும் இரண்டாற்றிற்கும் இடையே உள்ள வளநாட்டில் கபாடபுரம் என்னும் நகரை அமைத்து அதனைத் தலைநகரமாகக் கொண்டு அதில் மீண்டும் சங்கத்தை நிறுவித் தமிழ்மொழியைப் போற்றிப்புரந்தான். இச்சங்கம் இடைச் சங்கமெனப்பட்டது.

இடைச் சங்கத்தில் தொல்காப்பியனார் முதலாகப் பல புலவர்கள் வீற்றிருந்து தமிழாராய்ச்சி செய்தனர். இலக்கியமும், இலக்கணமும், கலைகளுமாக அச்சங்கத்தினின்றும் வெளிவந்த நூல்கள் எண்ணிறந்தன. இவற்றுள் முதன்மையானது தொல்காப்பியம். அப்போது நிகழ்ந்த ஒரு பெருங்கடல்கோளால் பஃறுளியாறும், பன்மலையடுக்கத்துக் குமரிக்கோடும் குமரியாறும் இடையிலுள்ள நாடு நகரங்களும் அழிந்தன.

கபாடபுரம் இக்கடல்கோளால் அழியவும் முடத்திருமாறன் என்னும் பாண்டியன் தன்னாட்டுள் இப்போதுள்ள கூடல் என்னும் இம்மதுரை மாநகரை உண்டு பண்ணி மூன்றாம் தமிழ்ச் சங்கமான கடைச் சங்கத்தை நிறுவினான். கடல் கொண்டதனால் உண்டான தன்னாட்டின் குறையை நிரப்புதற்குச் சேர, சோழனோடு பொருது அவர்கள் நாட்டில் ஒரு சிறு பகுதியைக் கைக் கொண்டான். அதனால் அவன் நிலந்தருதிருவிற் பாண்டியன் எனவும் கூறப்பட்டான். அது முதல் இம்மதுரை பாண்டிய நாட்டிற்கேயன்றித் தமிழ்நாடு முழுவதுக்குமே மொழி வளர்ச்சியில் தலைநகரமாகத் திகழ்ந்தது.

இதுவே தமிழ்ச் சங்கத்தாரின் வரலாற்றுச் சுருக்கமாக அறியப்படுவது. இங்ஙனம் கூறப்படும் சங்க வரலாற்றுள் முதல் இரண்டு சங்கங்களைப் பற்றிய விரிவும் தெளிவுமாக வரலாறுகளை நாம் அறிதற்குரிய சான்றுகள் நமக்கு மிகுதியாகக் கிடைத்தில. முச்சங்கங்களைப் பற்றி, இறையனார் களவியல் பாயிர உரையிலும் தொல்காப்பிய உரையாசிரியர்களது உரைகளிலும் சில சங்க இலக்கிய உரைகளிலும், ஒரு சில குறிப்புக்களே நமக்குக் கிடைக்கின்றன. இவற்றுள் சங்க வரலாற்றைச் சற்று விரிவாக எடுத்துரைப்பது இறையனார் களவியலுரையே. இவ்வுரை 11ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்டதே யெனினும் கருத்து முழுவதும் சங்கப் புலவர் நக்கீரனாரதே என்பதில் ஐயமில்லை. இக் களவியல் உரை சங்கம் இருந்த நகரங்களையும் அவற்றை நிறுவிய பாண்டியர்களையும், சங்கப் புலவர் சிலரையும்,

ஒவ்வொரு சங்கத்திற்குரிய புலவர்களின் தொகையையும், சங்கம் நிகழ்ந்த ஆண்டுகளின் அளவையும், முதலிடைச் சங்க நகரங்கள் கடல் கோளால் அழிந்ததையும் எடுத்துரைப்பது வரலாற்று முறைக்கு மிகவும் பொருத்தமானதாகவே இருக்கின்றது. இவ் வரலாற்றில் நம்பிக்கை கொண்டன்றோ, உரையாசிரியர்கள் பலரும் இவ்வரலாற்றுக் குறிப்புக்களைத் தம் உரையகத்து ஆங்காங்கு இடை மடுத்து எடுத்துக் காட்டிச் செல்லுகின்றனர்?

தொல்காப்பிய உரையாசிரியர்களுள் பேராசிரியர் "தலை இடை கடைச் சங்கத்தாரும், பிற சான்றோரும்", "தலைச் சங்கத்தாரும் இடைச் சங்கத்தாரும் கடைச் சங்கத்தாரும், இவ்விலக்கணத்தால் செய்யுள் செய்தார்", அவ்வழக்கு நூல் பற்றியல்லது மூன்று வகைச் சங்கத்தாரும் செய்யுள் செய்திலர்'' என்று கூறும் உரைகளுள், களவியல் உரையிற்காணும் சங்க வரலாற்றுக் குறிப்புகள் பல காணப்படுகின்றன.

ஆசிரியர் நச்சினார்க்கினியர் தமது தொல்காப்பியப் பாயிர உரையில், "அவ்வாசிரியராவார், அகத்தியனாரும், மார்க்கண்டேயனாரும், தலைச் சங்கத்தாரும், முதலியோர்" என்றும் புறத்திணையியல் உரையில் "தமிழ்ச் செய்யுட் கண்ணும், இறையனாரும் அகத்தியனாரும் போல்வார் செய்தன தலையும், இடைச் சங்கத்தார் செய்தன இடையும், கடைச் சங்கத்தார் செய்தன கடையுமாகக் கொள்க" என்றும் இன்னும் பிறவாலும் தம்முரையுள் களவியல் உரை குறித்த சங்கங்களையும் புலவர்கள் சிலரின் பெயர்களையும் குறிப்பிட்டுள்ளனர்.

அடியார்க்கு நல்லார் சிலப்பதிகார உரையுள், "இரண்டாம் ஊழியதாகிய கபாடபுரத்தினிடைச் சங்கம்" என்றும், "கடைச்சங்க மிரீஇய பாண்டியருள் கவியரங்கேறிய பாண்டியன் மதிவாணனார் செய்த மதிவாணனார் நாடகத் தமிழ் நூல்", என்றும், "முதலூழி இறுதிக்கண் தென் மதுரை யகத்துத் தலைச் சங்கம்", என்றும் கூறியுள்ளார். இவ்வுரைப் பகுதியில் முதற் சங்கம், இடைச் சங்கம் இருந்த நகரங்களும் கவியரங்கேறிய பாண்டியர்களும் குறிக்கப்பட்டிருத்தல் காண்க.

*"இவ்வகை யரசரிற் கவியரங் கேறினார்*
*ஐவகை யரசர் ஆயிடைச் சங்கம்*
*விண்ணகம் பரவும் மேதகு கீழ் கீர்த்திக்*
*கண்ணகன் பரப்பிற் கபாடபுரமென்ப"*

என்ற பழைய அகவலிலும் கபாடபுரத்தில் சங்கம் இருந்த செய்தி சுட்டப்பட்டிருக்கின்றது. மேலும் பிற்காலத்தில் சேக்கிழார் பெருமானும், தம் பெரியபுராணத்துள், ''சாலு மேன்மையிற்ற லைச்சங்கப் புலவனார் தம்முள்'', என்று தலைச் சங்கப் புலவரைக் குறிப்பிட்டுள்ளார்.

களவியல் உரைப்பாயிரம் கூறும் முச்சங்க வரலாறு புனைந்துரையே என்றும், வேண்டுமானால் அப்பாயிரம் குறிப்பிடும் கடைச் சங்க வரலாற்றையே ஒருவாறு உண்மையென உடன்படலாம் என்றும் ஒருசாரார் கூறுவர். அங்ஙனம் அவர்கள் கூறுதற்குக் காரணம் அவ்வுரைநடைகளுள் காணப்படும் 'என்ப', 'போலும்' என்னும் சொற்கள் கட்டுரைச் சுவைபட நின்ற இடைச் சொற்கள் எனக் கொள்ளாது ஐயப் பொருள் தரும் சொற்களாகக் கொண்ட திரிபுணர்ச்சியே யாகும். அன்றியும் அவ்விரு சங்கத்திற்கும் உடன்படாதோர், இம் முதலிடைச் சங்கங்களைப் பற்றிய குறிப்புகள் மூன்றாம் சங்க நூல்களுள் யாண்டும் விளக்கமுறக் காணவில்லையே என்றும் வினாவுவர். அவ்வாறு வினாவுவது பொருந்தாது.

*''தென்னவற் பெயரிய துன்னருந் துப்பிற்*
*றொன்முது கடவுட் பின்னர் மேய*
*வரைத்தா ழருவிப் பொருப்பிற் பொருந''*

*''தொல்லாணை நல்லாசிரியர்*
*புணர் கூட்டுண்ட புகழ்சால் சிறப்பின்*
*நிலந்தரு திருவின் நெடியோன் போல''*

என்ற மூன்றாம் சங்க நூலாகிய மதுரைக் காஞ்சிப் பாட்டின் அடிகளாகிய இவ்விரு பகுதியிலும் முறையே பாண்டியன் ஒருவன், அகத்தியரைத் தலைவராகக் கொண்டு முதற் சங்கம் நிறுவித்தானும் அச்சங்கத்தில் அகத்தியர்க்கு அடுத்து வீற்றிருந்த செய்தியும் நிலத்தரு திருவின் நெடியோனாகிய முடத்திருமாறன் இடைச் சங்கம் நிறுவிப் புலவர்களைக் கொண்டு தமிழாராய்ந்த திறனும் குறிக்கப் பெற்றுள்ளன. ''தென்னவற் பெயரிய'' என்ற அடிக்கு உரை எழுதுங்கால் நச்சினார்க்கினியர்,''இதனால் அகத்தியருடன் தலைச் சங்கத்தைப் பாண்டியன் இருந்து தமிழாராய்ந்த சிறப்புக் கூறினார்'', என்று விரித்துரைத்திருப்பது நன்கு கருதத் தக்கது.

அன்றியும் முதலிடைச் சங்கப் புலவர்களாகக் களவியல் உரை கூறும் சில புலவர்கள் பாடிய பாடல்களும், இடைச் சங்கத்திருந்த

முடத்திருமாறன் பாடல்களும், தொல்காப்பியப்பாயிரம் பாடிய பனம்பாரனார் பாடல்களும் கடைச்சங்கத் தொகை நூல்களுள் ஆங்காங்குத் தொகுக்கப்பட்டடுள்ளன. பல உரையாசிரியர்கள் முதலிடைச் சங்கங்களை ஒப்புக் கொண்டு மூவகைச் சங்கத்துச் சான்றோர் எனக் குறிப்பிட்டு அவர்களது யாப்புக்களைத் தம் உரையகத்துப் பல்லிடத்தும் பாராட்டிச் சொல்லிச் சென்றுள்ளனர். மிகவும் சேய்மைத்தான கால நிகழ்ச்சிகளை, கிடைக்கும் ஆதாரங்கள் ஒரு சிலவாக இருப்பினும் அவற்றின் சிறப்புக்களைக் கொண்டு நம்புவதே நற்பேரறிஞர்களது கடனாகும்.

இடைச் சங்கம் இருந்ததாக அறியப்படும் கபாடபுரத்தின் செய்தி, வடமொழி ஆதி காவியமாகிய வான்மீகத்திலும் வியாச பாரதத்திலும் கட்டப்பட்டிருப்பது இடைச் சங்கம் இருந்த நகரம் இப் பெயருடன் ஒன்றிருந்த உண்மையை வலியுறுத்தும் ஒரு சிறந்த புறச் சான்றாக அமைந்துள்ளது. வான்மீகத்தில் காணப்படும் அக் குறிப்பாவது, கிஷ்கிந்தா காண்டத்தில் ''வானரர்களே'' பொன் மயமானதும் அழகானதும் முத்துக்களால் அலங்கரிக்கப்பட்டது பாண்டியர்க்குத் தகுதியுடையதுமான கபாடபுரத்தைப் பார்க்கக் கடவீர்'' என்று வருவதாகும்.

வியாசபாரத துரோணபருவத்துள், ஒரு பாண்டியன் தன் தந்தையைக் கொன்று கபாடபுரத்தை அழித்த கேசவனையும் துவாரகையையும் நாசம் பண்ணுவதற்குப் படையெடுத்த செய்தியொன்று குறிக்கப்பட்டுள்ளது. சாணக்கியர் தம் பொருள் நூலில் முத்துக்களின் வகைகளை எடுத்துக் கூறுமிடத்துக் கபாடபுரத் துறையில் குளித்த முத்தின் வகையைப் பாண்டிய கவாடகம் என்று குறித்துள்ளார்.

இவற்றால் இடைச் சங்கம் இருந்த கபாடபுரம் இராமாயண காலத்தும் பாரத காலத்தும் சீர்த்த நிலையில் இருந்தது என்பது நன்கு தெளியப்படுகின்ற தன்றோ ! இப்பாரதத்திலும் சாணக்கியரின் பொருள் நூலிலும் குறிப்பிட்ட இச் செய்திகளால், வான்மீகத்தில் குறிக்கப்படும் கபாடம் என்பது கோட்டைக் கதவினையே குறிக்குமென்றும் பின்பு அது ஆகுபெயராகப் பாண்டியனது நகரத்தைக் குறிக்குமென்றும், கபாடபுரம் என்று நகரமே பாண்டியருக்கு இருந்ததில்லையென்றும் கூறுவார் கூற்றுப் பொருந்தாதேயாகும்.

## கடல்கோள்

முதற் சங்கம், இடைச் சங்கம் என்பன இருந்ததில்லை என்று கூறுவார், அச்சங்கங்கள் இருந்த நகரினைக் கடல் கொண்டது என்னும் வரலாற்றினையும் ஏற்றுக்கொள்ளார் என்பது வெளிப்படை பல்லாயிரம் ஆண்டுகட்கு முன்பு தமிழகப் பெருநிலத்தின் கோடி ஆப்பிரிக்காக் கண்டத்துடன் இணைந்திருந்த தென்றும் பின்பு அளக்கமுடியாத அப்பேருழியில் நிகழ்ந்த ஒரு பெருங்கடல் கோளால் அப்பெரு நிலப்பகுதி முழுவதும் பெருங்கடற் பகுதியை ஆராய்ந்து கண்ட பௌதிக நூல் வல்லாராகிய ஹேக்கல் முதலிய மேலை நாட்டுப் பேராசிரியர்கள் ஆராய்ந்து வெளியிட்டுள்ளனர். அப்பேருழியில் நடந்த கடல் கோளில் அழிந்த பெருநிலப்பரப்பினை இலெமூரியாக் கண்டம் என்பர். தமிழ் நூல்களில் கூறப்படும் கடல்கோள் அதனினும் பிற்பட்டதாகும்.

இக்கடல்கோள்களும் இருமுறை நடந்ததாகக் கருதுவது பொருந்தும் முதலில் நிகழ்ந்த சிறு கடல் கோளால் தலைச் சங்கம் இருந்த தென் மதுரை மட்டும் அழிய, இரண்டாவது நிகழ்ந்த பெருங்கடல் கோளால் தமிழ் நிலப் பகுதியும் கபாடமும் குமரியாறுவரை அழிந்தன.

இக்கடல் கோள்கள் பற்றிய குறிப்புக்கள் கடைச் சங்க நூல்களுள் காணப்படுகின்றன.

தொகை நூல்களுள் கற்றறிந்தார் ஏத்தும் கலி யென்று புகழப்பட்ட கலித் தொகையில்,

> *'மலிதிரை யூர்ந்துதன் மன்கடல் வெளவலின்*
> *மெலிவின்றி மேற்சென்று மேவார் நாடிடம்படப்*
> *புலியோடு வின்னீக்கிப் புகழ்பொறித்த கிளர்கெண்டை*
> *வலியினான் வணக்கிய வாடாச்சீர்த் தென்னவன்''*
>
> (கலித். 104-1-4)

என்னும் பாடலில் பாண்டியன் தன் நாட்டினைக் கடல் வவ்விக் கொண்டமையின், அக்குறையினை நிரப்பச்க சோழனோடும் சேரனோடும் பொருது, அவர்கள் நாட்டின் சில பகுதிகளைத் தன் நாட்டுடன் சேர்த்துக் கொண்டேன் என்று கூறப்பட்டுள்ளது. பஃறுளி யாறும், பல மலைகளும், குமரியாறும், கடல் கொண்ட செய்தியைச் சிலப்பதிகாரமும்,

*'வடிவே லெறிந்த வான்பகை பொறாது*
*பஃறுளி யாற்றுடன் பன்மலை யடுக்கத்துக்*
*குமரிக் கோடுங் கொடுங்கடல் கொள்ள''*

(சிலப். காடுகாண். 18, 20)

என்று அறிவிக்கின்றது.

'நெடியோன் குன்றமும் தொடியோன் பௌவமும்'' என்ற சிலப்பதிகார வேனிற் காதை அடியில் அடியார்க்கு நல்லார், நிலத்தரு திருவிற் பாண்டியன் காலத்துப் பாண்டிய நாட்டுத் தென்திசையில் நாற்பத்தொன்பது நாடுகள் கடல்கோளால் அழிந்த செய்தியை மிக விரிவாக எடுத்துரைத்துள்ளார். மேற்காட்டிய இச்சான்றுகளால் கடைச் சங்க காலத்துப் புலவர் பெருமக்களும் உரையாசிரியர்களும், பண்டைத் தமிழகக் கடல் கோளைப் பற்றி நன்கு அறிந்திருந்தனர் என்பது பெறப்படும். இங்ஙனம் பண்டைய இலக்கண இலக்கியங்களாலும், உரைகளாலும் அறியப்படும் கடல் கோளைப் பற்றி ஒரு சாரார் ஐயுற்றுக் கூறுவதெல்லாம் தமிழ் நாட்டில் பழமை, தமிழ் இலக்கியத்தின் பழமை, தமிழருடைய நாகரிக முதிர்ச்சி ஆகிய இவற்றையெல்லாம் பிற்பட வைக்க வேண்டுமென்ற அவர்களது குறுகிய நோக்கத்தினாலேயே போலும் !

## மூன்றாம் சங்கம்

இடைச் சங்கம் இருந்த கபாடபுரம் அழிந்த பின்னர் அச்சங்கத் திறுதிக் கண்ணிருந்த முடத் திருமாறன் என்பான் கடல் என்னும் இம்மதுரைக் கண் மூன்றாம் சங்கத்தை நிறுவினான் என்பது முன்னரே கூறப்பட்டது. பாண்டியர் நிறுவிய இக்கல்விக் கழக நிகழ்ச்சியிலும் ஒரு சில அறிஞர் ஐயமுற்றுப் பல்லாண்டுகட்கு முன்னிருந்தே எழுதி வந்துள்ளனர். இவர்களது ஐயப்பாடு தவறானது என்பதை எடுத்துக் காட்டுதற்குரிய உரமுடைய சான்றுகள் பல உள என்பதனைத் தமிழிலக்கிய ஆராய்ச்சிமிக்க அறிஞர் யாவரும் நன்கறிவர். சைவ வைணவ சமயப் பெரியோர்களின் வாக்குகளிலும் சங்கத் தொகை நூல்களிலும் ஆங்காங்கு ஐயமற இம்மூன்றாம் சங்கத்தைப் பற்றிய செய்திகள் சுட்டப்பட்டுள்ளன. இவ்வுயர் மதிற் கடலில் இயற்றமிழ்ச் சங்கமும், இசைத் தமிழ்ச் சங்கமும் இருந்த உண்மையை வாரவூர் அடிகளாம் மாணிக்கவாசகர்

*''சிறைவான் புனற்றில்லைச் சிற்றம் பலத்துமென் சிந்தையுள்ளும்*
*உறைவான் உயர்மதிற் கூடலி னாய்ந்த வொண்டீந் தமிழின்*
*துறைவாய் நுழைந்தனை யோஅன்றி ஏழிசைச் சூழல் புக்கோ''*

என்று திருக்கோவையாருள் குறிப்பிடுகின்றார்.

இற்றைக்கு ஆயிரத்து முந்நூறு ஆண்டுகளுக்கு முன்னர் இருந்த திருநாவுக்கரசர் 'நன்பாட்டுப் புலவனாய்ச் சங்க மேறி நற்கனகக்கிழி தருமிக் கருளினோன் காண்' என்ற தம் பாடலின் அடிகளில் சங்கமிருந்த செய்தியைக் குறிப்பிடுகின்றார். வைணவ சமயப் பெரியாராகிய திருமங்கை யாழ்வார், 'கலியன் சொன்ன சங்கத் தமிழ் மாலை பத்தும்' என்று தமிழைச் சங்கத் தமிழாகவே கூறுகின்றார்.

நமக்கு மிகவும் நெடுங் காலத்திற்கு முன்னர் இருந்த இப்பெரியோர்களது வாக்கில் பயின்றிருக்கும் இச் சங்கச் செய்தி எத்துணை வலியுடையதாய் இருக்கு மென்பது கூறாமலே விளங்கக் கூடியது.

மேலும் இம்மூன்றாம் சங்கம் இக்கூடல் மாநகரின் கண் நிலவியிருந்த வரலாற்றுண்மையை இச் சங்கத் தொகை நூல்கள் பலவும் ஆங்காங்குக் குறிப்பிடுகின்றன. சிறுபாணாற்றுப்படை மதுரையைப் பற்றிக் கூறுமிடத்து, தமிழ் நிலைபெற்ற எனபதில் தமிழ் மொழி நிலை பெற்றிருந்ததென்னும் பொருள் தருவதன்றித் தமிழ் நிலையம் என்னும் சங்கத்தின் பெயரே தமிழ் நிலை என்று குறையாக நின்றதெனப் பொருள் கொள்ளவும் இடமிருத்தல் காண்க. 'தமிழ்கெழு கூடல் தண்கோல் பேந்தே', என்று புநானூற்றிலும், 'தமிழ் வையைத் தண்ணம் புனல்' என்று பரிபாடலிலும், 'தென் தமிழ் மதுரைச் செழுங்கலைப் பாவாய்', என மணிமேகலையிலும், இம்மதுரையைக் கூறுமிடமெல்லாம் தமிழோடு இணைத்தே கூறுவது அதன்கண் தமிழ்ச் சங்கம் இருந்த பெருமை பற்றியேயாம். அன்றியும் சின்னமனூர்ச் செப்பேட்டில், 'மகாபாரதம் தமிழ்ப்படுத்தும் மதுராபுரிச் சங்கம் வைத்தும்', எனப் பாண்டியன் மெய்க்கீர்த்தியில் இம்மதுரைச் சங்கம் குறிப்பிடப்பட்டுள்ளது. இன்னும் இம் மதுரையில் மூன்றாம் சங்கம் நிறுவப்பட்டிருந்த உண்மையைப் புலப்படுத்துதற்குரிய சான்றுகள் எத்துணையோ உள. அவையெல்லாம் ஈண்டு உரைப்பின் பெருகும்.

### சங்கம் என்னும் பெயர்

இனி, சங்கம் என்னும் சொல் வடசொல் என்றும், அங்ஙனமாயின் தமிழ்ச் சங்கத்தைக் குறிக்க வழங்கிய சொற்கள் யாவை என்றும் உசாவுவர் சிலர். அங்ஙனம் உசாவுவதற்குக் காரணம், சகர ஒற்று, அ, ஐ, ஔ என்னும் மூவுயிரோடும் கூடி மொழிக்கு முதலில் தமிழ் மொழியில் வாராது என்று உரைக்கும் தொல்காப்பிய விதி பற்றியேயாம். (எழுத்து : மொழி மரபு ; சூத் ; 62) தொல்காப்பியர் காலத்து இச்சொல் வழக்கு இல்லாமையால் சங்கம் என்ற பொருளில், கடைச்சங்க நூல்களில் காணப்படும் நிலையம், புணர்ப்பு, அவை, கழகம், கூடல் முதலிய சொற்கள் வழங்கியிருக்கக் கூடும். கடைச்சங்க நூல்களுள் சகரத்தை முதலாகக் கொண்ட

சவட்டுதல், சமழ்ப்பு, சந்து முதலிய சொற்களும் வழங்கப் பெற்றுள்ளமையின் அம்முறையில் பின்பு உண்டான தமிழ்ச் சொல்லே சங்கம் என்று கொள்ளினும் இழுக்காகாது. 'புலம்புரிச் சங்கம் பொருளொடு முழங்க' என்று மணிமேகலையாசிரியர் இச் சொல்லை எடுத்தாண்டிருத்தல் காண்க.

**சங்க நூல்கள்**

இம்மூன்று சங்கங்களின் வாயிலாகவும் வெளிவந்த நூல்கள் இவை யென்பதை முன்பு குறிப்பிட்ட இறையனார் களவியலுரைப் பாயிரத்திலும், அடியார்க்கு நல்லார் முதலியோர் உரைகளிலும் காணலாகும். இவற்றுள் முதற் சங்கத்தெழுந்த நூல்களாகக் குறிப்பட்டவற்றுள் இப்பொழுது ஒன்றும் நமக்குக் கிடைத்திலது. அச்சங்க அகத்திய சூத்திரங்கள் ஒரு சில மட்டும் சில உரைகளிடையே காணப்படுகின்றன. இடைச் சங்க நூல்களுள் தொல்காப்பியம் நீங்கலாக ஏனைய கலைகள் யாவும் அலைகளுக்கிரையாயின. இந்நூல்கள் எல்லாம் அழிந்தொழிந்தமைக்கு ஒரு புலவர்,

*'ஓரணம் உருவம் யோகம் இசைகணக்கு இரதம் சாலம்*
*தாரண மறமே சந்தம் தம்பம் நீர்நிலம் உலோகம்*
*மாரணம் பொருள் என்றின்ன மானநூல் பலவும் வாரி*
*வாரணம் கொண்ட தந்தோ வழிவழிப் பெயரும் மாள''*

என்று இரங்கக் கூறியுள்ளார்.

இவைகளேயன்றிக் கடைச்சங்க நூல்களுள்ளும் பல கலைகள் நாளடைவில் இறந்தொழிந்தன என்று அறியப்படுகின்றது. அவற்றுள் காதலும் வீரமும் பொருளாகக் கொண்டு பாடிய அகப்பொருள் புறப்பொருள் பாட்டுக்கள் அடங்கிய தொகை நூல்களே இப்போது எஞ்சியுள்ளன. இத்தொகை நூல்களில் அடங்கிய பாடல்களின் எண்ணிக்கை 2426 ஆகும். இவ்வருமைப் பழம் பாடல்களேனும் நமக்கு அழிந்து போகாமல் கிடைத்திருப்பத நமது நல் ஊழேயாகும். இவைகளேயன்றிக் காப்பியங்களாக இச்சங்க காலத்தின் பிற்பகுதியில் எழுந்தவை சுவைமிக்க சிலப்பதிகாரமும், மணிமேகலையும் ஆகும்.

இம் மதுரையின் ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாகத் திகழ்ந்திருந்த தமிழ்ச் சங்கமானது இன்றைக்கு ஆயிரத்து எண்ணூறு ஆண்டுகட்கு முன்னர் இருந்த உக்கிரப் பெருவழுதியின் காலத்திற்குப் பின்னர் நின்று நிலவாது மறைந்தொழிந்தது. அவனுக்குப் பின் வந்த பாண்டியர்கள் சங்கம் நிறுவித் தமிழை வளர்க்காது நெகிழ்ந்து போயினர். பின்பு ஐந்தாம் நூற்றாண்டில் புதிய சமயக் கொள்கைகளைத் தமிழ் நாட்டில் பரப்புவதற்கு

எழுந்த சமணர்களும் பௌத்தர்களும் இம்மதுரையில் சங்கங்கள் நிறுவி, அவற்றின் வாயிலாக இலக்கணமும், அவர்களது சமயச் சார்பான கலைகளும் காப்பியங்களுமாக வெளியிட்ட நூல்கள் பலப் பலவாம். பன்னூறாண்டுகள் மதுரையில் இம்முறையில் வளர்ச்சி பெற்று வந்த தமிழ்மொழி, பின்னைய நூற்றாண்டுகளில் அரசியல் குழப்பங்களும் களப்பிரர் பல்லவர் முதலிய அந்நியர் ஆட்சியும் ஏற்பட்ட காலத்தில் புறக்கணிக்கப்பட்டது. அப்போது அரசரது அவைக்களங்களிலும் தனித்தும் இருந்த சில புலவர்கள் நூல்கள் பல இயற்றித் தமிழ் மொழியை வளம்படுத்தினார்கள். அந்நூல்களுள் சிறந்தவை. கம்ப இராமாயணம், பெரிய புராணம் முதலியன. பிற்காலத்தில் வடமொழிப் பிரபந்தங்களையும் புராணங்களையும் தழுவி எழுந்த சிறு நூல்களும் புராணங்களுமே யல்லாது, மக்கட்குப் பயன்படும் சிறந்த முறையில் நூல்கள் வெளிவரவில்லை. இதனால் தமிழ் இலக்கியத்தின் போக்கும் அமைப்பும் வேறுபட்டன. இவற்றிற்குக் காரணம் இந்நூற்றாண்டிலிருந்த புலவர்கள் பண்டைத் தமிழ் நூல்களின் பயிற்சியும், ஆராய்ச்சியும் குன்றியவர்களாக இருந்ததே.

தமிழ் மக்களது தனி மாண்பை அறிதற்குக் கருவியான சங்க இலக்கியப் பயிற்சி இங்ஙனம் நாட்டில் குன்றியதற்குக் காரணம் சைன, பௌத்த, சைவ, வைணவப் பெரியார்கள் இயற்றிய காப்பியம், புராணம், பிரபந்தங்கள் முதலான சமயச்சார்பான நூல்களும், நிகழ்ந்த சமயப் பூசல்களும், மக்களது உள்ளத்தில் உண்டாக்கிய ஒரு புதிய பெரும் புரட்சியேயாகும்.

மதுரைத் தமிழ் சங்கத்தில் வெளிவந்து பல்லாயிரம் ஆண்டுகள் வழக்கிலிருந்து, பின்னைய நூற்றாண்டுகளில் 19-ம் நூற்றாண்டின் இறுதிப் பகுதிவரை, சிதல் வாய்பட்டுப் பழைய தமிழ்ப் புலவர் அகங்களில் தேடுவாரற்றுக் கிடந்த ஏடுகளைத் தேடி எடுத்து, ஆய்ந்து அச்சிட்டு நம் முன்னோரது கலைச் செல்வங்களை மீண்டும் ஒருவாறு நாம் பெறுமாறு செய்த பெருமை முதற் கண் காலஞ்சென்ற பெரியார்களான சி.வை. தாமோதரம் பிள்ளை அவர்களுக்கும் மகாமகோ பாத்தியாய டாக்டர் உ.வே. சுவாமிநாதய்யர் அவர்கட்கும், மதுரை நான்காம் சங்கம் நிறுவிய துங்கர் பாண்டித் துரைத் தேவர் அவர்கட்கும் உரியதாகும். இந்நூல்கள் வெளிவந்துள்ள இக் காலத்துப் பலர் இவற்றைக் கற்று, தமிழ் மொழியின் தனிநிலை, தமிழ் நூல்களின் சிறப்பியல்பு, தமிழர் நாகரிகம், அவர்களது உயரிய குறிக்கோள் முதலியவற்றை யெல்லாம் நன்கறிந்தவர்களாக விளங்குகின்றார்கள்.

(தொடர்ச்சி நவம்பர் இதழில்)

# ஆசிரியர் குழு

திரு. இரா. குருசாமி பி.ஏ.,

பெரும்புலவர் திரு. இரா. இளங்குமரன்

முனைவர் திரு. தமிழண்ணல்

முனைவர் திரு. சுப. அண்ணாமலை

முனைவர் திரு. கதிர் மகாதேவன்

முனைவர் திரு. க. சின்னப்பா

தொடர்பு முகவரி

ஆசிரியர்

செந்தமிழ்
மதுரைத் தமிழ்ச் சங்கம்
54, தமிழ்ச் சங்கச் சாலை
மதுரை - 625 001
தொலைபேசி : 0452 - 6575615

பதிப்பாசிரியர் : இரா. அழகுமலை, எம்.ஏ., எம்.ஃபில்.
செயலாளர், மதுரைத் தமிழ்ச் சங்கம், மதுரை – 1
தொலைபேசி : 0452 - 6575615

அச்சிடுவோர் : தவம் பிரிண்டர்ஸ், 32, மேலமாசி வீதி, மதுரை – 1

RNI Regd. No. 5508/56 October 2010



# செந்தமிழ்க் கல்லூரி

## மதுரைத் தமிழ்ச் சங்கம்

(தேசியத் தரக்கட்டுப்பாட்டுக் குழுவின் B+ தேசியத்தரம் பெற்றது)

மதுரை காமராசர் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பெற்றது.

54, தமிழ்ச் சங்கம் சாலை, மதுரை – 625 001 ✆ 0452 - 2343707, நிகரி : 0452 - 4373475

**2010 - 2011ஆம் ஆண்டிற்கான சேர்க்கை நடைபெறுகிறது**

- ✦ இளம் இலக்கியம்
- ✦ இளங்கலை
- ✦ முதுகலை
- ✦ இளம்நிலை ஆய்வாளர்
- ✦ முதுநிலை ஆய்வாளர்
- ✦ பி.ஏ., பி.லிட்., எம்.ஏ., மாணவர்களுக்கான தமிழாசிரியர் பயிற்சி

**நன்கொடை கிடையாது**

**சிறப்பு அம்சங்கள்**

மாணவர்களுக்குக் கணினிப் பயிற்சி, யோகா மற்றும் தியானப் பயிற்சி, ஓலைச்சுவடி மற்றும் கல்வெட்டுப் பயிற்சி, பேச்சுக்கலைப் பயிற்சி, படைப்பாக்கத் திறன், விரிவுரையாளர் தகுதித் தேர்வுப் பயிற்சி போன்றவற்றில் சிறப்புப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

**செம்மொழித் திட்டத்தின் கீழ் பணி வாய்ப்புக்கள் உள்ளன**

**இரா. அழகுமலை**
செயலாளர்
மதுரைத் தமிழ்ச் சங்கம்

**முனைவர் சு. விஜயன்**
முதல்வர் (பொறுப்பு)
செந்தமிழ்க் கல்லூரி

**இரா. குருசாமி**
செயலாளர்
செந்தமிழ்க் கல்லூரி

அனுப்புநர்,
**செயலாளர்**
மதுரைத் தமிழ்ச் சங்கம்
மதுரை – 625 001

From
SECRETARY
Madurai Tamilsangam
Madurai - 625 001
TAMILNADU, S. INDIA

பெறுநர் / To,
திருமிகு.இரா.அழகுமலை
எம்.ஏ.,எம்.ஃபில்., அவர்கள்,
21-A முத்துராமலிங்கத் தேவர் தெரு,
கோச்சடை,
மதுரை 625 010.

Printed by V. Govindarajan, published by R. ALAGUMALAI M.A., M.Phil. on behalf of Madurai Tamil Sangam, Madurai and printed at Davam Printers, 32, West Masi Street, Madurai - 1, and published at 54, Tamil Sangam Road, Madurai. Editor R. ALAGUMALAI M.A., M.Phil.